தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.




9337501889, 7789941009



PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 249 21.04.2026 செவ்வாய்க்கிழமை

Chennai Volume: 01 Issue: 249 Tuesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(21–04–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–8
பிறை: வளர்பிறை
திதி
சதுர்த்தி காலை 8.47 வரை
பிறகு பஞ்சமி.
நட்சத்திரம்:
ரோகிணி காலை 6.15 வரை.
பிறகு மிருகசீர்ஷம் மறுநாள்
விடியற்காலை 4.22 வரை
பிறகு திருவாதிரை.
யோகம்
அமிர்த/சித்த/ மரணயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00–4.30 மணி
எமகண்டம்
காலை 9.00–10.30 மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி.

மேஷம் ...................... சுபம்
ரிஷபம் ................... உதவி
மிதுனம் ..................... நட்பு
கடகம் ................. உவகை
சிம்மம் ...............பெருமை
கன்னி ................ ..நன்மை
துலாம் ..................முயற்சி
விருச்சிகம் .......... ஆதாயம்
தனுசு ........................ பரிசு
மகரம் ................. பாராட்டு
கும்பம் ...................கவனம்
மீனம் ...................பயணம்

## ஹோர்முஸ் நீரிணையை மேலும் ஒரு இந்திய கப்பல் கடந்தது!

**புதுடெல்லி, ஏப்.21:**

31 இந்திய மாலுமிகளுடன் கடந்த சனிக்கிழமை புறப்பட்ட இந்தக் கப்பல் ஏப்.22–ஆம் தேதி மும்பை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்மூலம் ஹோர்முஸ் நீரிணை பகுதியை 10 இந்திய கப்பல்கள் கடந்துள்ளன. அங்கு மொத்தம் 24 இந்திய கப்பல்கள் சிக்கியிருந்த நிலையில் தற்போது அதன் எண்ணிக்கை 14–ஆக குறைந்தது.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'கடந்த சனிக்கிழமை ஹோர்முஸ் நீரிணையைக் கடக்க முயன்ற 'சாம்னர் ஹெரால்ட்' மற்றும் 'ஜெக் அர்ணவ்' ஆகிய இரு இந்திய கப்பல்கள் மீது ஈரான் படைகள் துப்பாக்கிச்சூடு நடத்தின. இதனால் இரு கப்பல்களும் மீண்டும் வளைகுடா பிராந்தியத்துக்கு திரும்பின. இந்திய கப்பல்கள் மீது அத்துமீறி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு தில்லியில் உள்ள ஈரான் தூதருக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

அவரிடம் இந்திய வெளியுறவுச் செயலர் நேரில் கண்டனம் தெரிவித்தார். மேலும், ஹோர்முஸ் நீரிணை பகுதியில் சிக்கியுள்ள இந்தியக் கப்பல்கள் பாதுகாப்பாக கடப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஈரான் அதிகாரிகள் எடுக்க வேண்டும் எனவும் தூதரிடம் அவர் வலியுறுத்தினார். இதனிடையே, கச்சா எண்ணெய் ஏற்றி வந்த 'தேஷ் கரிமா' என்ற வணிகக் கப்பல் ஹோர்முஸ் நீரிணையை கடந்த சனிக்கிழமை பாதுகாப்பாக கடந்தது.

## தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2026

# தேர்தல் பிரசாரம் இன்று ஓய்கிறது: தலைவர்கள் இறுதிக்கட்ட பிரசாரம்



**சென்னை, ஏப்.21:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரசாரம் செவ்வாய்க்கிழமை (ஏப். 21) மாலை 5 மணியுடன் நிறைவடைகிறது.

சென்னையில் முக்கிய பிரமுகர்கள் பிரசார நிறைவு நிகழ்ச்சிக்கு தொகுதி வாரியாக தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

தமிழகத்தில் 2026 சட்டப்பேரவைத்தொகுதிக்கான தேர்தல் கடந்த மார்ச் 15 -ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. அதன்படி, மார்ச் 30- ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் தொடங்கியது. கடந்த ஏப்ரல் 6- ஆம் தேதியுடன் வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்தது.

மனுக்கள் பரிசீலனை ஏப்ரல் 7- ஆம் தேதி நடைபெற்றது. இதையடுத்து ஏப்ரல் 9 -ஆம் தேதி வேட்பு மனுக்கள் திரும்பப் பெறப்பட்டன. அதன்படி, சென்னையில் 16 சட்டப்பேரவைத்தொகுதிகளிலும் 419 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

சென்னை கொளத்தூரில் முதல்வர் மு.க.ஸ்டாலினும், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும், பெரம்பூரில் தவெக தலைவர் நடிகர் விஜய்யும் போட்டியிடுகின்றனர். அத்துடன் துறைமுகம், சைதாப்பேட்டை உள்ளிட்ட தொகுதிகளில் அமைச்சர்களும் போட்டியிடுகின்றனர்.

வேட்பாளர்கள் பிரசாரம் கடந்த ஏப்ரல் 10 -ஆம் தேதி முதல் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், வரும் 23- ஆம் தேதி (வியாழக்கிழமை) வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

அதன்படி, வரும் 21 -ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியுடன் பிரசாரம் நிறைவடைகிறது. பிரசாரத்தை நிறைவு செய்ய சென்னையில் உள்ள 16 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் அரசியல் கட்சியினர், சுயேச்சைகள் உள்ளிட்டோர் குறிப்பிட்ட இடங்களைக் கோரியுள்ளனர்.

அதனடிப்படையில் திமுக, அதிமுக, பாஜக மற்றும் தவெக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சியினருக்கு ஏற்கெனவே காவல் துறை அனுமதித்துள்ள பிரசார இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தவெகநிறைவு நிகழ்ச்சி நந்தனம் பகுதியில் நடைபெறுவதாகவும், அதில் கட்சித் தலைவர் விஜய் பங்கேற்கும் வகையில் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஜம்மு-காஷ்மீரில் பேருந்து கவிழ்ந்து 15 பேர் பலி! 20 பேர் காயம்!



**ஜம்மு, ஏப்.21:**

ஜம்மு-காஷ்மீரின் உதம்பூரில் பேருந்து ஒன்று மலைப்பாதையிலிருந்து உருண்டு விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து காகோர்ட் கிராமத்திற்கு அருகே நேற்று (20ம் தேதி) காலை 10 மணியளவில் பேருந்து கொண்டை ஊசி வளைவில் உதம்பூருக்குச் சென்றுகொண்டிருந்தபோது நிலைதடுமாறி உருண்டு கீழே விழுந்தது.

விபத்து குறித்து அறிந்த உள்ளூர் மக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்புப் பணியில் இறங்கி, இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டனர். பின்னர், போலீஸார், மீட்புக் குழுவினர் அங்கு விரைந்துசென்று காயமடைந்த 20 பேரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். உயிரிழந்த 15 பேரின் உடல்களும் அதே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், உதம்பூர் துணை ஆட்சியர் மிங்கா ஷெர்பாவிடம் தொடர்புகொண்டு நிலைமையைக் கேட்டறிந்தார். இதுதொடர்பாக போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலி எண்ணிக்கை 25 ஆக உயர்வு

**விருதுநகர், ஏப்.21:**

விருதுநகர் அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் காயம் அடைந்து தீவிர சிகிச்சை பெற்று வந்த மேலும் 2 பெண்கள் சிகிச்சை பலனின்றி இன்று (திங்கள் கிழமை) காலை உயிரிழந்தனர். இதையடுத்து பலி எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது.

விருதுநகர் அருகே உள்ள கட்டனார்பட்டியல் பட்டாசு ஆலையில் நேற்று மாலை ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 23 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். இவர்களில் 19 பேர் நேற்று இரவு அடையாளம் காணப்பட்டனர். 4 பேர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்நிலையில் இந்த விபத்தில் பலத்த தீக்காயம் அடைந்து விருதுநகர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த சேர்வைக்காரன் பட்டியைச் சேர்ந்த பேச்சியம்மாள் (51), திருத்தங்கலைச் சேர்ந்த பஞ்சவர்ணம் (56) ஆகியோர் உயிரிழந்தனர். இதையடுத்து இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

## பிரதமர் மோடியை மாரீசனுடன் ஒப்பிடுவதா?: தெலங்கானா முதல்வருக்கு பாஜக கண்டனம்!

**சென்னை, ஏப்.21:**

பிரதமர் நரேந்திர மோடியை ராமாயண கால அரக்கன் மாரீசனுடன் ஒப்பிட்டு தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தெரிவித்த கருத்துக்கு பாஜக கண்டனம் தெரிவித்துள்ளது.

ரேவந்த் ரெட்டி, சனிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் "வரும் 2029 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் தனது நிலையை வலுப்படுத்திக் கொள்வதற்காக மகளிர் இடஒதுக்கீட்டுக்கான அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்ற மோடி அரசு தீவிரமாக முயன்றது.

ராமாயண காலத்தில் சீதையைக் கடத்திச் செல்வதற்கு அரக்கனான மாரீசன் வந்தான். அதேபோன்று தற்போது அரசமைப்புச் சட்டத்தை கடத்திச் செல்ல மோடியும் பாஜக தலைமையிலான ஒட்டுமொத்த தேசிய ஜனநாயகக் கூட்டணியும் முயல்கின்றன. அப்படிப்பட்ட எந்த முயற்சியையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்' என்று தெரிவித்தார்.

இந்நிலையில், ரேவந்த் ரெட்டியின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்து பாஜகவின் தேசிய செய்தித் தொடர்பாளர் ஷெசாத் பூனாவாலா, எக்ஸ் வலைதளத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி வெறுப்பைப் பரப்புகிறார். மோடியை இகழ்வதன் மூலம் பிரதமர் எனப்படும் அரசியல்சாசனப் பதவியை அவர் அவமதிக்கிறார்.

பிரதமரை ஓர் அரக்கனுடன் ரேவந்த் ரெட்டி ஒப்பிடுகிறார். பிரதமர் நரேந்திர மோடியை காங்கிரஸ் 150 முறை வசைபாடியுள்ளது. பெண்கள் சக்தியை அவர் வலியுறுத்துவதால் அவரை காங்கிரஸ் வசை பாடுகிறது. இது தற்செயலாக நடக்கும் நிகழ்வு அல்ல; மாறாக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் செயலாகும்.

காங்கிரஸ் கட்சியினர் தேர்தல் ஆணையம், நீதித்துறை ஆகியவற்றையும் வசைபாடுகின்றனர். குடியரசுத் தலைவரையும் அவர்கள் விட்டுவைக்காமல் தரக்குறைவாக விமர்சித்தனர். முப்படைகள், சநாதன தர்மம், அரசியல்சாசனப் பதவிகள் ஆகியவற்றையும் காங்கிரஸார் தரம்தாழ்ந்து விமர்சித்தனர்.

காங்கிரஸ் கட்சி என்பது அன்புக்கான கடை அல்ல. வெறுப்பு என்பது காங்கிரஸின் அடையாளமாக மாறியுள்ளது என்று ஷெசாத் பூனாவாலா தனது பதிவில் கூறியுள்ளார்.

## இம்மாத இறுதியில் மீண்டும் ஏ.சி., செல்போன், பிரிட்ஜ், டி.வி. விலை உயருகிறது

**சென்னை, ஏப்.21:**

மெமரி சிப், கச்சா எண்ணெய்யில் இருந்து பெறப்படும் பிளாஸ்டிக் முதலிய மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளதை தொடர்ந்து, ஏ.சி., செல்போன், பிரிட்ஜ், வாஷிங்மெஷின், டி.வி. ஆகியவற்றின் விலை கடந்த 4 மாதங்களில் 3 முறை அதிகரித்துள்ளது. இம்மாத இறுதியில் 4-வது முறையாக மீண்டும் அதிகரிக்க இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்பு, பல்வேறு நுகர்வு பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. குறைக்கப்பட்டது. இதையடுத்து, வீட்டு உபயோக பொருட்களுக்கான தேவை அதிகரித்தது.

இந்தநிலையில் மூலப்பொருள் விலை உயர்வு, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, ஏ.சி.க்கான மின் சேமிப்பு விதிகளில் மாற்றம் ஆகியவற்றால் ஜனவரி இறுதி முதல் பிப்ரவரி வரையிலான காலக்கட்டத்தில் இவற்றின் விலை அதிகரித்தது.

மார்ச் இறுதி முதல் ஏப்ரல் முதல் வாரம் வரையிலான காலக்கட்டத்தில் சரக்கு போக்குவரத்து கட்டண உயர்வு, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, கச்சா எண்ணெய் தொடர்புடைய மூலப்பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றின் எதிரொலியாக 2-வது சுற்று விலை உயர்வு நடைமுறைக்கு வந்தது. அந்த வகையில்தான் தற்போது 4-வது முறையாக விலை அதிகிக்க இருக்கிறது.

## வாக்குப் பதிவு நாளில் சுற்றுலாத் தலங்கள் மூடல்!



**சென்னை, ஏப்.21:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 23 ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அன்றைய நாள் சுற்றுலாத் தலங்கள் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானலுக்கு ஏப்ரல், மே மாதங்களில் சீசனையொட்டி சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவது வழக்கம். இந்த ஆண்டு தற்போதே வெயிலின் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருவதால் கொடைக்கானலுக்கு வழக்கத்தைவிட அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இவர்கள் இங்கு இயற்கை எழில்காட்சிகளை பார்த்து ரசித்தாலும் நகரின் மையப் பகுதியிலுள்ள நட்சத்திர ஏரியில் படகு சவாரி செய்து மகிழ்வர். இங்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பிலும், கொடைக்கானல் நகராட்சி சார்பிலும் படகு சேவை இயக்கப்படுகிறது.

கொடைக்கானல் மேல்மலைக் கிராமமான மன்னவனூர் சுற்றுச்சூழல் மையம், ஆட்டுப் பண்ணை ஆராய்ச்சி மையம், பூம்பாறை குழந்தை வேலப்பர் கோயில், இயற்கைஎழில்காட்சிப்பகுதிகள், கூக்கால் ஏரி, அப்பர் லேக் வியூ, பசுமைப் பள்ளத் தாக்கு, பாம்பார் அருவி, பூம்பாறை செல்லும் சாலையான பழனி எழில் காட்சி, கைகாட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை தருகின்றனர்.

இந்த நிலையில், தமிழகத்தில் வாக்குப்பதிவு ஏப். 23 ஆம் தேதி நடைபெறுகிறது. அன்று விடுமுறை அறிவிக்கவிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் சுற்றுலாத் தலங்களுக்கு செல்ல வாய்ப்புள்ளது.

முன்னேற்பாடாக கொடைக்கானலைச் சுற்றியுள்ள தூண் பாறை, குணா குகை, பைன் மரக்காடுகள், மோயர் சதுக்கம், பேரிஜம் ஏரி போன்ற சுற்றுலாத் தலங்கள் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## அன்புமணியின் துரோகக் கும்பலுக்கு யாரும் வாக்களிக்க வேண்டாம்: ராமதாஸ் பரபரப்பு பேட்டி



**விழுப்புரம், ஏப்.21:**

அன்புமணியின் துரோகக் கும்பலுக்கு யாரும் வாக்களிக்க வேண்டாம் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவை தேர்தல் வருகிற 23ம் தேதி நடக்கிறது. தேர்தலுக்கான பிரசாரம் நாளை மாலையுடன் ஓய்கிறது. இதனால், அரசியல் கட்சி தலைவர்கள் தங்களது இறுதிக்கட்ட பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். இந்நிலையில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய பாமக நிறுவனர் ராமதாஸ்; அன்புமணியின் நோக்கம் மக்களுக்கு நல்லது செய்வது அல்ல; பணம் சம்பாதிப்பதுதான் இவர்களின் வேலை.

நான் வளர்த்தெடுத்த பிள்ளைகள் பணத்துக்காக அணி மாறி கொள்கையற்ற' துரோக கூட்டத்தில் இணைந்துள்ளார்கள். அதிகாரத்தை பணமாக்கும் கலைக்காகவே பயன்படுத்த நினைக்கிறார்கள். முக்கிய தருணங்களில் கூட மகனாகத் தன் கடமையைச் செய்யாதவர்தான் அன்புமணி. அண்மையில் உடல்நலக் குறைவால் சேலம் மருத்துவமனையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன். நான் சிகிச்சையில் இருந்தபோது நேரில் வந்து கூட நலம் விசாரிக்காதவர்தான் அன்புமணி;

மனைவியை போட்டியிடச் செய்யும் அன்புமணி, நேராக களமிறங்கலாமே? இந்தியாவிலே குறைவான நாட்கள் நாடாளுமன்றம் சென்ற எம்.பி. அன்புமணிதான். அன்புமணியின் துரோகக் கும்பலுக்கு யாரும் வாக்களிக்க வேண்டாம். 18 தொகுதிகளிலும் அன்புமணி தரப்பு வேட்பாளர்கள் தோற்க வேண்டும் என்று கூறினார்.

## டிசிஎஸ் ஊழியர்களுக்கு வலைதளங்களில் தொல்லை



**மும்பை, ஏப்.21:**

மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள டிசிஎஸ் கிளை அலுவலகத்தில் பணிபுரிந்த பெண் ஊழியர்கள், பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு மதமாற்றம் செய்யப்படுவதாக புகார் எழுந்தது. இதையடுத்து, அந்த நிறுவனத்தின் 7 முக்கிய நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பேஸ்புக், இன்ஸ்டா கிராம் மற்றும் வாட்ஸ்- அப் போன்ற டிஜிட்டல் தளங்கள் மூலம் பெண் ஊழியர்களுக்குத் தேவையற்ற குறுஞ் செய்திகளை அனுப்பி தொல்லை கொடுத்ததாக கைதானவர்களே வாக்கு மூலம் கொடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்குக் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அனுப்பிய ஆபாசக் கருத்துகள், சர்ச்சைக்குரிய வீடியோக்கள் மற்றும் உரையாடல்களைக் காவல் துறையினர் தற்போது ஆய்வு செய்து வருகின்றனர். குற்றவாளிகளின் செல்போன்கள் மற்றும் சமூக வலைதளக் கணக்குகளில் இருந்து அழிக்கப்பட்ட உரையாடல்களைத் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் மீட்கும் பணியில் காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

## கோடை வெயிலின் தாக்கம் நீர்நிலைகளில் குவியும் சுற்றுலா பயணிகள்



**ஆண்டிபட்டி, ஏப்.21:**

கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க, வைகை அணை உள்ளிட்ட நீர்நிலை பகுதிகளில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். ஆண்டிபட்டி அருகே வைகை அணை அமைந்துள்ளது. இந்த வைகை அணைப் பகுதியில் வலது கரை, இடது கரை எனப் பிரிக்கப்பட்டு இரண்டு பூங்காக்கள் அமைந்துள்ளன.

இந்த பூங்கா தேனி மாவட்டத்தில் சிறந்த சுற்றுலாத்தளமாக விளங்கி வருகிறது. வைகை அணை பூங்காவில் ஏராளமான பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பூங்காவிற்கு தேனி மாவட்டம் மட்டுமல்லாமல் மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். பூங்காவில் சனி மற்றும் ஞாயிறு விடுமுறை நாட்களில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வார்கள்.

வைகை அணை பூங்காவிற்கு குடும்பத்துடன் சென்று வருவதற்கும், குழந்தைகள் குஷியாக விளையாடுவதற்கும் ஏற்ற இடமாக உள்ளது. அணையின் இரண்டு புறங்களும் உள்ள பூங்காக்களில் ஏராளமான பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளது.

சிறுவர்கள் மகிழ்ந்து விளையாடுவதற்கு சிறுவர் பூங்கா, பெரியார் மாதிரி வைகை பூங்கா, மச்சக்கன்னி பூங்கா, பயில்வான் பார்க், யானை சறுக்கல், ஊஞ்சல், மலைகள் போல் அமைக்கப்பட்டு வரைபடங்கள், நீரூற்றுகள், புல் தரைகள், ஆங்காங்கே ஓய்விடங்கள், குழந்தைகள் குஷியாக சென்று வர உல்லாச ரயில், படகு குழாம், இசையுடன் தண்ணீர் நடனமாடும் வகையில் அமைக்கப்பட்டு இசை நடன நீரூற்று என ஏராளமான அம்சங்கள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கோடை வெயிலின் தாக்கத்தை சமாளிக்கவும், வார விடுமுறையையொட்டியும் நேற்று பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் குடும்பத்துடன் வைகை அணை பூங்காவில் குவிந்தனர்.

சிறுவர் பூங்கா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஊஞ்சல், சறுக்குகளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் அனைவரும் ஏறி மகிழ்ச்சியுடன் பொழுதை கழித்தனர். வைகை அணை பூங்கா உள்ளிட்ட நீர்நிலை பகுதிகளில் நேற்று சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி உள்ளூர் மக்களும் குவிந்தனர்.

## ஓட்டப்பிடாரம் தொகுதியில் 'ஒஸ்தி'யாளராகும் வாய்ப்பு யாருக்கு?



**கோவில்பட்டி,ஏப்.21:**

தூத்துக்குடி மாவட்டத்தில் தனித் தொகுதியாக உள்ள ஓட்டப்பிடாரத்தில் தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள 8 வார்டுகளும் அடங்கும். 1962-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இத்தொகுதியானது ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய 3 வட்டங்களை சேர்ந்த பகுதிகளை உள்ளடக்கியது. உப்பு உற்பத்தி, மானாவாரி விவசாயம், இதர விவசாயம் சார்ந்த தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன.

இத்தொகுதிக்கு உட்பட்ட வாகைக்குளத்தில் தூத்துக்குடி விமான நிலையம், சிப்காட் தொழிற்பூங்கா, மின்சார கார் தயாரிப்பு தொழிற்சாலை போன்றவை அமைந்துள்ளன. உர தொழிற்சாலை, கனநீர் ஆலை உள்ளிட்ட பல்வேறு தொழிற்சாலைகளும் இங்கு உள்ளன. புதியம்புத்தூர் பகுதியில் ஆயத்த ஆடை தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஓட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட, கே.பி.தளவாய்புரத்தில் 100-க்கும் மேற்பட்ட வீடுகள், இரண்டு கோயில்களின் ஆவணங்கள் தொடர்பான வில்லங்கச்சான்றில் தனியார் நிறுவனத்தின் பெயர் வருகிறது. இந்த பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஓட்டப்பிடாரம் தொகுதியில் கடந்த சட்டப்பேரவை தேர்தலில் திமுக வேட்பாளர் எம்.சி.சண்முகையா 73,110 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் பி.மோகன் 64,600 வாக்குகளும், புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கே.கிருஷ்ணசாமி 6,544 வாக்குகளும் பெற்றனர். திமுக வேட்பாளர் சண்முகையா 8,510 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

தற்போது இத்தொகுதியில் 13 பேர் களத்தில் நிற்கும் நிலையில் திமுக, அமமுக, புதிய தமிழகம், நாம் தமிழர் கட்சி ஆகிய 4 வேட்பாளர்களிடையே போட்டி உள்ளது. திமுக வேட்பாளர் பை.மூ. ராஜஜெயத்தை கூட்டணியின் பலமான வாக்கு வங்கி, மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள், 2026 தேர்தல் வாக்குறுதிகள், ஆகியவை வெற்றி பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று திமுகவினர் நம்புகின்றனர்.

அதே நேரத்தில் இவர், அருகே உள்ள தொகுதியைச் சேர்ந்தவர் என்பது இவருக்கு பலவீனமாக கருதப்படுகிறது. அமமுக வேட்பாளர் ஆர். சுந்தரராஜன் மிகவும் எளிமையாக அணுகக்கூடிய நபராக தொகுதி முழுவதும் அறியப்படுகிறார். ஏற்கெனவே 2016-ல் அதிமுக சார்பில் வெற்றி பெற்ற இவர், பின்னர் டிடிவி தினகரன் அணியில் இணைந்ததால் பதவியை ராஜினாமா செய்ய நேர்ந்தது. இதுகுறித்த சிறிய அனுதாபம் இப்போதும் இருந்து வருகிறது.

டிடிவி தினகரன் நேரடியாக வந்து பிரச்சாரம் செய்தது தனக்கு பலம் அளிக்கும் என்று அவர் நம்புகிறார். அதே நேரத்தில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாய வாக்குகள் இவருக்கு முழுமையாக கிடைக்குமா என்ற சந்தேகம் எழுகிறது.

புதிய தமிழகம் கட்சி வேட்பாளர் டாக்டர் கே.கிருஷ்ணசாமி கிராமங்கள் தோறும் சென்று மக்களை சந்தித்து வாக்கு சேகரித்து வருகிறார். அதிமுக உள்ளிட்ட கட்சிகளால் ஒரு சமுதாயமே முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற கருத்தை முன்வைத்து இவர் செய்யும் பிரச்சாரம் ஒரு சில கிராமங்களில் வரவேற்பை பெற்றுள்ளது.

ஏற்கெனவே, 2 முறை எம்எல்ஏ. வாகதேர்ந்தெடுக்கப்பட்டபோது, செய்த பணிகளை கூறியும், இந்த முறை வெற்றி பெற்றால் எத்தகைய திட்டங்கள் கொண்டு வருவேன் என வாக்குறுதி அளித்தும் வாக்கு சேகரிக்கிறார். கிராமப்புறங்களில் இவருக்கு ஆதரவு அதிகம் உள்ளது.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அனுஷியா புதிதாக களம் கண்டாலும் மற்ற வேட்பாளர்களுக்கு இணையாக தினந்தோறும் காலை முதல் இரவு வரை மக்களை சந்தித்து சீமானின் கொள்கைகளையும், வாக்குறுதிகளையும் எடுத்துக்கூறி வாக்கு சேகரித்து வருகிறார்.

தவெக மதன்ராஜ் அவரது கட்சித் தலைவர் விஜய்யின் செல்வாக்கு மூலம் வாக்குகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளார். தேர்தலுக்கு இன்னும் 3 நாட்களே உள்ள நிலையில், மக்கள் யாரை ஒஸ்தியானவராக தேர்வு செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## நெருங்கும் தேர்தல்..! பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் வெற்றி பெற நேரில் வாழ்த்திய இயக்குநர் பா.ரஞ்சித்

**சென்னை, ஏப்.21:**

தமிழக சட்டசபை தேர்தல் 23-ந் தேதி நடக்கிறது. 234 தொகுதிகளில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர். தி.மு.க., அ.தி. மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி நிலவி வருகிறது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 பேர் தயார் நிலையில் உள்ளனர். இந்த முறை 100 சதவீத வாக்கு சதவீதத்தை எட்டுவதற்கு தேர்தல் ஆணையம் தகுந்த விழிப்புணர்வு பிரசாரங்களையும் முன்னெடுத்துள்ளது.

தேர்தல் நெருங்கி வருவதால், அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பிரசாரம் மேற்கொண்டுள்ளனர். தமிழகம் முழுவதும் வீதி வீதியாக பிரசாரம் நடந்து வருகிறது.



இந்நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் திரு.வி.க. நகர் தொகுதியில் போட்டியிடும் பொற்கொடி ஆம்ஸ்ட்ரங்-ஐ, இயக்குநர் பா.ரஞ்சித் சந்தித்து வாழ்த்தியதுடன் தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

## புதுமணத் தம்பதியை வாழ்த்திய விஜய்



**கும்மிடிப்பூண்டி , ஏப்.21:**

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதியில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் ரோடு ஷோ மூலம் பிரச்சாரம் செய்து வருகிறார்.

ரசிகர்கள், தொண்டர்கள் படை சூழ விஜய் ரோடு ஷோ நடத்தி வருகிறார்.

இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதியில் ரோடு ஷோ நடத்தி வரும் விஜய், புதுமண தம்பதியை வாழ்த்தினார். கொளப்பஞ்சேரி அருகே விஜயின் வாகனத்தை நிறுத்தி அவரிடம் புதுமணத் தம்பதி வாழ்த்து பெற்றனர்.

புதுமணத் தம்பதியை தேர்தல் பிரச்சார வாகனத்தில் ஏற்றி வாழ்த்து கூறிய விஜய் அவர்களை அனுப்பி வைத்தார்.

விஜயை காண திரளும் ரசிகர்கள் கூட்டத்திற்கு மத்தியில், விஜய் தனது வாகனத்தில் ஏற்றி அவரிடம் திருமண வாழ்த்து பெற்ற புதுமணத் தம்பதி மகிழ்ச்சியில் திக்குமுக்காடினர்.

## ஆண் நண்பர்களுடன் மது விருந்தில் பங்கேற்ற இளம்பெண் மர்ம மரணம்

**விசாகப் பட்டினம், ஏப்.21:**

ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினம் ஜோடுகுல பாலத்தை சேர்ந்தவர் சாந்த குமாரி. அதே பகுதியை சேர்ந்த இவரது நண்பர்கள் சாய் கிரண், ஜஸ்வந்த், மணி, லட்சுமி சவுன்யா, மஞ்சு. அனைவரும் அடிக்கடி மது விருந்தில் கலந்து கொள்வது வழக்கம்.

இந்த நிலையில் சனிக்கிழமை இரவு இவர்கள் அனைவரும் விசாலாட்சி நகரில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் 2 அறைகளை வாடகைக்கு எடுத்தனர். நள்ளிரவு வரை மது குடித்ததால் மது போதை தலைக்கு ஏறியது. அப்போது லட்சுமி சவுதன்யாவுக்கும், சாந்த குமாரிக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

இதில் ஆத்திரம் அடைந்த நண்பர்கள் சாந்தகுமாரியின் கையை பிளேடால் கிழித்தனர். பின்னர் சாந்தகுமாரியின் முகத்தில் செருப்பால் தாக்கி சிகரெட்டால் உடல் முழுவதும் சூடு வைத்ததாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அறையில் உள்ள மின்விசிறியில் சாந்த குமாரி தூக்கில் தொங்கினார். அவரது நண்பர்கள் சாந்த குமாரியை மீட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். ஆஸ்பத்திரியில் சாந்தகுமாரியை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். அப்போது சாந்தகுமாரியின் நண்பர்கள் அவரது பெற்றோருக்கு போன் செய்து வலிப்பு நோய் ஏற்பட்டதால் சாந்தகுமாரி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக தகவல் தெரிவித்தனர்.

## ஜப்பானில் 7.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை விடுப்பு



**டோக்கியோ, ஏப்.21:**

ஜப்பானின் வடகிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் இன்று 7.5 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த நிலநடுக்கத்தை அடுத்து குஜி துறைமுகத்தில் 80 சென்டி மீட்டர் உயரத்துக்கு சுனாமி அலைகள் ஏற்பட்டதாகவும் அது கூறியுள்ளது.

இது தொடர்பாக ஜப்பானிய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "உள்ளூர் நேரப்படி இன்று (திங்கள்கிழமை) மாலை 4.53 மணிக்கு ஜப்பானின் மியோகோவுக்கு 100 கிலோ மீட்டர் கிழக்கு - வட கிழக்கே 7.5 ரிக்டர் அளவுக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஜப்பானிய நில அதிர்வு அளவுகோல்படி அதிகபட்ச உயர் அளவு 7 எனும் நிலையில், இந்த நிலநடுக்கத்தின் அளவு 5 ஆக பதிவாகி உள்ளது. 10 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ஆரம்பத்தில் 7.4 ஆக மதிப்பிடப்பட்டாலும் பின்னர் அது 7.5 ஆக அதிகரிக்கப்பட்டது. இதே அளவிலான நிலநடுக்கங்கள் ஒரு வாரத்துக்கு ஏற்படக்கூடும். இந்த நிலநடுக்கம் காரணமாக ஹொக்கைடோ, அமோரி, இவாடே மாகாணங்களின் பசுபிக் கடற்கரைகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 3 மீட்டர் உயரம் வரையிலான சுனாமி அலைகள் உடனடியாக வரக்கூடும்" என தெரிவித்துள்ளது.

## "விசிக தவிர்க்க முடியாத கட்சியாக இருப்பதற்கு திமுகவும், கூட்டணிக் கட்சிகளுமே காரணம்" - திருமாவளவன்

**கும்பகோணம், ஏப்.21:**

"தவிர்க்கமுடியாத அரசியல் கட்சியாக விடுதலை சிறுத்தைகள் இருக்கின்றது என்றால் அதற்கு காரணம் திமுகவும், கூட்டணி கட்சிகளும்தான். தமிழகத்தில் 8 தொகுதிகளில் போட்டியிடும் நாம், வெற்றி பெற வேண்டும் என கூட்டணி கட்சிகள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கின்றார்கள். ஆகவே, திமுக தோழமைக் கட்சி வேட்பாளர்களை நாம் வெற்றி பெற வைக்க வேண்டும்," என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

கும்பகோணம் தொகுதி திமுக வேட்பாளரும், எம்எல்ஏவுமான சாக்கோட்டைக.அன்பழகனுக்கு வாக்கு கேட்டு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் பேசியதாவது: விடுதலை சிறுத்தைகள் கட்சியினர், நடிகரின் பின்னால் சென்று கொண்டிருக்கின்றார்கள் என



அண்மையில் சில வதந்திகள் பரவிக் கொண்டிருக்கின்றன. சினிமா மயக்கம் இல்லாதவர்கள், கொள்கை பிடிப்புள்ளவர்கள் நீங்கள் என்பது எனக்கு உறுதியாக தெரியும்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில கட்சியாக அங்கீரிகபட்டதற்கு வாக்கு ஒரு காரணமாக இருந்தாலும், கூட்டணி கட்சிகளும் காரணம். நாடு சுதந்திரம் பெற்று 80 ஆண்டுகளில் தென் இந்தியாவிலேயே அங்கீகாரம் பெற்ற கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சி தான்.

தவிர்க்கமுடியாத கட்சியாக விடுதலை சிறுத்தைகள் இருக்கின்றது என்றால் அதற்கு காரணம் திமுகவும், கூட்டணி கட்சிகளும்தான். தமிழகத்தில் 8 தொகுதிகளில் போட்டியிடும் நாம், வெற்றி பெற வேண்டும் என கூட்டணி கட்சிகள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கின்றார்கள். ஆகவே, திமுக தோழமைக் கட்சி வேட்பாளர்களை நாம் வெற்றி பெற வைக்க வேண்டும்.

அதிமுக தற்போது அமித்ஷா அதிமுகவாக மாறி விட்டது. பாஜக-அதிமுக இரண்டு கட்சிகளுக்கும் கொள்கை அடிப்படையில் உறவு இல்லை. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பாஜகவுடன் கூட்டணி இல்லை என்றார். ஆனால் அவர் காலமாகி விட்டார் என்ற துணிச்சலில் பாஜகவுடன், பழனிசாமி கூட்டணி வைத்துள்ளார். இது ஜெயலலிதாவிற்கு செய்த துரோகமாகும்.


திமுக கூட்டணி வெற்றி பெறக்கூடாது என பாஜக திட்டமிட்டு, நண்பர் விஜயை களம் இறக்கி விட்டுள்ளார்கள். அவருடன் ஆர்எஸ்எஸ் உறவில் இருக்கின்றது என்றால் பாஜகவுடன் உறவு என்பது அர்த்தம். நண்பர் விஜய், கட்சி தொடங்கி 3 ஆண்டுகளில் இதுவரை அவர் பேசியது, திமுக வெறுப்பு, திமுக பற்றி தான் பேசியுள்ளார். ஆனால் விஜய், மோடி, அமித்ஷா ஆகியோரையும், சமத்துவம், சகோதரத்துவம் உள்ளிட்டவைகளை பற்றி பேசவில்லை. அவர் பாஜக கொள்கை எதிரி என்ற ஒரு வார்த்தை தவிர வேறு எதுவும் பேசமாட்டார்.

அதிமுக - பாஜக கூட்டணியை வெற்றி பெற வைத்து ஆட்சியில் அமர வைக்க வேண்டும் என்பது தான் விஜய்யின் நோக்கமாகும். கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் வாக்கு திமுக கூட்டணிக்கு சென்று விடக்கூடாது என களம் இறக்கி விடப்பட்டவர் விஜய். அவருக்கு வாக்கு செலுத்தினால், பாஜகவிற்கு செலுத்துவதாகும். பாஜக, ஆர்எஸ்எஸ் அமைப்பினர் முகமூடி அணிந்து வருகிறார்கள். எனவே, கும்பகோணம் திமுக வேட்பாளர் சாக்கோட்டை க.அன்பழகனுக்கு வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று அவர் பேசினார்.


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
Age 18 to 35
Good Looking
Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318



WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


உ
முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள்
வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல்
பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள்
மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
1. முன் பணம் ₹ 1,00,000/-
2. 50% பணம் செலுத்தினால் பத்திரப்பதிவு செய்யப்படும்.
3. மாதம் குறைந்தபட்சம் ₹ 2500/- முதல் செலுத்தலாம்
4. முழு தொகையும் செலுத்திய பின்பு உரிய நபரிடம் பத்திரம் ஒப்படைக்கப்படும்.
5. பத்திரப்பதிவு
6. பட்டா COPY
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
அரக்கோணம்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


அகிலாண்டேஸ்வரி நகரில்
வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு
= 30x40 = 1200 ச.அடி
மனை விலை
1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம் : பத்தமடை உள்ளது
திருநெல்வேலி மாவட்டம்
LOCATION


குன்னத்தோழம்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு,
உடல் தகுதி,
அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை
அனுபவம் தேவை,
வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிழக்கு வரளன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல்
வேலை செய்யலாம்
தொடர்புக்கு
8148215778
8248610592
A trustworthy help service for Chennai families


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


THANIGAI
WANTED
ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit / No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work – just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy
90879 55111


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872

## கவிதை அரங்கம்!



உன் புன்னகையில்
தொலைந்து போனேன்,
மீட்க மனமில்லாமல்
இன்றும் அங்கேயே
இருக்கிறேன்.

நீ பார்க்கும் ஒரு நொடிப்
பார்வையில், என் ஓராயிரம்
கவலைகள் மறைந்து
போகின்றன.

வார்த்தைகள் தேடும்
நேரத்தில், உன் கண்களே
எனக்குப் பதிலளிக்கின்றன.

உன்னோடு நடக்கும் ஒரு
சிறு தூரம், என் வாழ்வின்
நீளமான பயணம்
ஆகட்டும்

## வாழ்க்கை தத்துவம்...



உன் உற்சாகம்
மிகுந்ததாக இருக்க
எளிய வழிகளை தேடு

தவறான வுழியில்
வரும் பணம்
தவறாமல்
துன்பத்தைத் தரும்

தேவையில்லாதவர்களிடமும்
தகுதியில்லாதவர்களிடமும்
நாம் யார் என்பதை
நிரூபிக்காமல் இருப்பதே
சிறந்த புத்திசாலித்தனம்

உன் மேல் சத்தியம்
செய்யும் ஒருவரையும்
ஒருபோதும் நம்பாதே
தீர விசாரிக்கும் வரை

## அத்தை மக ரத்தினமே...

எனக்கு எட்டுவயது இருக்கும் போது என் அத்தைக்கு குழந்தை பிறந்தது அதுவும் பெண் குழந்தை குழந்தையில் பார்ப்பதற்கு அப்படி ஒரு அழகாய் இருப்பாள் அவள். நான் சின்னப் பையனாய் இருந்ததால் எனக்கான விளையாட்டு பொம்மையாகிப் போனாள் அவள். என் அத்தையும் மாமாவும் என் வீட்டிற்கு இரண்டு வீடு தள்ளியே குடியிருந்தார்கள் அதனால் தானோ என்னவோ நான் அன்றாடம் அங்கே சென்று குட்டிப் பாப்பாவோடு விளையாடுவது வழக்கமாகிப் போனது.

பாப்பாவுக்கு பெயர் வைக்கிற விசேஷம் நடந்தது ஊரில் இருக்கும் அத்தனை சொந்த பந்தங்களும் என் அத்தை வீட்டில் கூடியிருந்தார்கள் எப்போதும் எங்கள் வீடும் அத்தை வீடும் வெவ்வேறாய் இருந்ததில்லை இரண்டும் ஒன்றுதான் என்பது போல் இருக்கும் காரணம் எல்லாவற்றிலும் இரண்டற கலந்தே இருப்போம். பாப்பாவுக்கு பெயர் வைப்பதற்கு எல்லோரும் ஒவ்வொரு பெயரை தேர்வு செய்து சொன்னார்கள் என் அத்தை மாமா கூட வேறு ஒரு பெயரை சொன்னார்கள் அவர்கள் சொன்ன எந்த பெயரிலும்.... எனக்கு உடன்பாடில்லாமல் இருந்தது.

எந்த பெயரிலும் உடன்பாடு இல்லாது இருந்த எனக்கு ஏனோ தெரியவில்லை என்னையும் அறியாமல் என் முகம் வாட்டமாய் இருந்தது எப்படியோ என் அத்தை என்னை கவனித்து விட்டாள் போலிருக்கிறது என் அருகே வந்து என் தலையை வாஞ்சையோடு தடவியபடி"ஏப்பா இப்படி மூஞ்சி உம்மென்று வைத்துக்கொண்டு இருக்கிறாய்? ஏன் என்னாயிற்று...?" என்ற அத்தை என் கன்னங்களை செல்லமாய் கிள்ளி படி கேட்டாள். அத்தையை பொருத்தவரை நானும் அவளுக்கு குழந்தைதான் அவளுக்கு ஆரம்பத்தில் இருந்து என் மீது எப்போதும் ஒரு தனி பாசம் இருந்து கொண்டே இருக்கும் என் வீட்டில் யாராவது என்னை திட்டினாலோ, அடித்தாலோ கூட என் அத்தை குறுக்கே வந்து நின்று அவர்களிடம் சண்டைக்கு நிப்பாள்.

அந்த நேரத்தில் நான் மெதுவாக அத்தையிடம் சொன்னேன் நீங்கள் தெரிவுசெய்து இருக்கிற எந்த பெயரும் பாப்பாவுக்கு வைக்க எனக்கு பிடிக்கவில்லை என்றேன். "அப்படியானால் உன் பாப்பாவுக்கு நீயே ஒரு பெயரை சொல்லேன் என்று செல்லமாக என்னை தட்டினாள் அத்தை. இதுதான் சமயம் என்று என் மனதில் உள்ள ஒரு பெயரை அத்தையின் காதில் கிசுகிசுத்தேன் நான் அத்தையின் காதில் கிசுகிசுத்த அடுத்த வினாடி அத்தை மிகவும் ஆச்சரியமாகவும் அதிசயமாக தன்னை பார்த்தாள். "இங்க பாருடா தங்கம் நீ சொல்ற தேவயானி என்கிற பெயர் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு .... நான் கொஞ்சம் மாமா கிட்டயும் கேக்குறேன் நல்ல பெயர் தான்டா என் செல்லமே" என்றபடி உறவினர்களையும் மாமாவையும் நோக்கி அடக்க ஆரம்பித்தாள்.

அத்தை மாமாவிடமும், உறவினர்களிடமும்...என்ன சொன்னாள் என்று எனக்கு தெரியவில்லை ஆனால் எல்லோரும் ஒருசேர ஒரேநேரத்தில் என்னை பார்த்து சிரித்தார்கள். அந்த சிரிப்பில் ஏதோ கேலியும் கிண்டலும் கலந்திருப்பது போல எனது தெரிந்தது. வேகமாக...மாமா என்னிடம் வந்து என்னை கட்டி அணைத்தபடி "சூப்பர்ரா தங்கம் நீ சொன்ன பேரையே பாப்பாவுக்கு வச்சிடலாம்" என்றார். நான் சொன்ன பெயரை மாமா ஒத்துக் கொண்டதற்கு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது கொஞ்சம் தலைகால் புரியாமல் கூட ஆடினேன் என்றே சொல்லலாம். பாப்பாவின் காதுகளில் எல்லோரும் தேவயானி. தேவயானி.. தேவயானி... என்று மூன்று முறை அழைத்தார்கள் என்னை அருகே கூப்பிட்டு நீயும் பாப்பாவின் காதில் நீ விரும்பிய பெயரை சொல் என்றார்கள் எனக்கு முகமெல்லாம் மகிழ்ச்சியில் பூத்துக் குலுங்கியது அது என்ன மாயமோ தெரியவில்லை நான் பாபாவின் அருகில் சென்றதும் பாப்பா என்னை பார்த்து குலுங்கி குலுங்கி சிரித்தாள். அந்த சிரிப்பில் நான் என்னையே மறந்து தேவயானி என்கிற பெயரை மூன்று முறை உச்சரித்தேன். ஒரு வழியாக பெயர் சூட்டு விழா முடிந்து எல்லோருக்கும் கிளம்பி விட்ட பிறகு நான் பாப்பாவை என் மடியில் கிடைத்தயபடி வைத்து கொஞ்சுக் கொண்டிருந்தேன். அவளும் நான் சொல்வதை எல்லாம் புரிந்து கொண்டதைப் போல கையையும் அலையும் அசைத்து அவளுடைய பூ முகத்தால் என்னை பார்த்தபடி சிரித்துக் கொண்டே இருந்தாள்.

மெல்ல..மெல்ல... காலங்கள் உருண்டோடியது, இப்போது பாப்பா பனிரெண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறாள். நானும் கல்லூரியில் இரண்டாம் டிகிரி முடிக்க போகிறேன் எங்கள் இருவருடைய அன்பும் பாசமும் ஒரே நேர்கோட்டில் சென்று கொண்டிருந்தது என்றாலும் எனக்கு ஒரு தயக்கம் மயக்கம் இருந்து கொண்டு தான் இருந்தது காரணம் பாப்பாவின் அழகு என்னை சற்றே தூர நிற்க வைத்தது ஏனென்றால் நான் அட்டைகரி பாப்பாவோ ரதியையும் மிஞ்சி விடுகிற ஓரழகுத்தோரணை உள்ளவள் அவளுக்கும் எனக்கும் எந்த விதத்திலும் ஒத்து வராது என்று நான் நினைத்தேன் என் குடும்பத்தார்கள் எங்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று பேசுகிற போதெல்லாம் எனக்கு ஒரு தயக்கமும் ஒரு நடுக்கமும் இருந்து கொண்டே இருந்தது. பாப்பா வருகிற போகிற இடங்களில் அவளை சந்திப்பதை நான் தவிர்த்துக்கொண்டே இருந்தேன்.

அந்தப் பேரழகு இந்தக்கரி மூட்டையோடு ஒன்றாக சேருமா என்கிற மனத்தயக்கம் எனக்கு. பல தருணங்களில் பல நேரங்களில் பாப்பா என்னிடம் நெருங்கி நெருங்கி வருவார் நானோ ஒதுங்கி ஒதுங்கி போக ஆரம்பித்தேன் இது பாப்பாவின் மனசுக்கு பெரும் காயத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்று எனக்கு தெரியவில்லை.

ஒரு நாள் என் வீட்டில் ரூமுக்குள் நான் இருந்தபோது சடேரென்று என் ரூமுக்குள் வந்த பாப்பா கதவை படேரென்ன சாத்திவிட்டு,என்னை என் கன்னத்தில் மாறி மாறி அடிக்க ஆரம்பித்தாள் ஏதும் செய்வதறியாது அதிர்ந்து போய் நின்றேன் நான்.

"ஏன் மாமா என்னா யிற்று உனக்கு எதற்காக என்னை தவிர்த்து செல்கிறாய் ஏன் என்னிடம் பேச மாட்டேன்கிறாய்"

என்று கேட்டபடி கேவி கேவி அழ ஆரம்பித்தாள் பாப்பா. அந்தஅழகுப் பதுமை அப்படி அழுது நான் என்றுமே பார்த்ததில்லை... நான் என்ன நினைத்து அவளை தவிர்த்து நடக்கிறேன் என்பதை அவள் புரிந்து கொண்டாளென்று தெரிகிறது. அவளை ஆரத்தழுவி அவளது கேசங்களை கோதியபடி அவளுக்கு ஆருதலாக என்னை நான் இழந்து கொண்டிருந்தேன்.

சற்றும் எதிர்பாராத அந்த நேரத்தில் சடேரெண கதவை திறந்து கொண்டு என்னுடைய மொத்த குடும்பமும், அத்தை மாமா, அம்மா அப்பா வென... உள்நுழைந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து ரூமுக்குள் வருவார்கள் என்று நாங்கள் இருவரும் எதிர்பார்க்கவில்லை... மிகவும் சந்கோஜத்தோடு நாங்கள் இருவரும் கையை பிசைந்தபடி நின்று கொண்டிருந்தோம்.

"டேய் பசங்களா நாங்கள் இதைத்தான் எதிர்பார்த்தோம்... இனி எப்போதும் நீங்கள் இருவரும் இப்படியே ஒன்றாகவே இருக்க வேண்டும் இதுதான் எங்களாசை"

என்று கூறிவிட்டு ஆனந்தமும் மகிழ்ச்சியும் கலந்த முகத்தோடு அத்தையும், மற்ற எல்லோரும் மீண்டும் கதவை சாத்திவிட்டு எல்லோரும் வெளியேறிச்சென்று விட... மீண்டும் அது கோபத்தோடு அதே தாபத்தோடு என்னை என் கன்னத்தில் அடிக்க ஆரம்பித்தாள் என் அத்தை மகள்.

முத்தையா மோகன்
கோயம்புத்தூர் 18.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



மாணவன்: "சார், நேத்து லீவுல நான் எங்க போனேன்னு சொல்லுங்க பாப்போம்?"

ஆசிரியர்: "எங்க போன?"

மாணவன்: "பக்கத்து வீட்டுக்கு சார் !"

## தினம் ஒரு சமையல்

### உருளைக்கிழங்கு 65

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 250 கிராம் | -உருளைக்கிழங்கு |
| 1&1/2டேபிள் ஸ்பூன் | -மைதா மாவு |
| 3டேபிள் ஸ்பூன் | -அரிசி மாவு |
| 1 டீஸ்பூன் | -இஞ்சி விழுது |
| 1 டீஸ்பூன் | -மிளகாய் தூள் |
| 1/2 டீஸ்பூன் | -கரம் மசாலாத்தூள் |
| 1/2 டீஸ்பூன் | -மிளகுத்தூள் |
| 1/4 டீஸ்பூன் | -பேக்கிங் சோடா |
| தேவையான அளவு | -உப்பு |
| 2 பச்சை மிளகாய்கறிற்பில் | |
| கறிவேப்பிலை | |
| மல்லி இலை | |
| எண்ணெய் | -பொரிப்பதற்கு |

செய்முறை:



உருளைக் கிழங்கை வேக வைத்து தோல் உரித்து தயாராக வைத்துக் கொள்ளவும்.

அரிசி மாவு,மைதா மாவு,மற்ற மசாலா பொருட்களை எடுத்து தயாராக வைக்கவும்.

ஒரு பௌலில் மாவு,மசாலா பொருட்களை சேர்த்து உப்பு தேகைக்கேற்ப தண்ணீர் சேர்த்து நன்கு கலந்து ஆலூ 65 மாவு தயார் செய்யவும்.

அதில் வேக வைத்துள்ள உருளைக்கிழங்குகளை பெரிய துண்டுகளாக நறுக்கி,கலந்து வைத்துள்ள மாவில் சேர்க்கவும்.


வாணலியை ஸ்டவ்வில் வைத்து சூடானதும் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் மாவில் போட்டு வைத்துள்ள உருளைக் கிழங்குகளை ஒவ்வொன்றாக போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.

வேறு ஒரு தவாவில் எண்ணெய் ஊற்றி பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய்,கறிவேப்பிலை சேர்த்து பொரிந்ததும், தயாராக பொரித்து வைத்துள்ள உருளைக் கிழங்கை சேர்த்து கலந்து விட்டு எடுத்தால் உருளைக் கிழங்கு 65 தயார்.

தயாரான ஆலுவை எடுத்து ஒரு தட்டில் வைக்கவும். இப்போது மிகவும் சுவையான மொறு மொரு உருளைக் கிழங்கு 65 சுவைக்கத்தயார்.

இந்த உருளைக்கிழங்கு 65 ஒரு சூப்பரான ஸ்டார்டர். வெளியில் மிகவும் கிரிஸ்பியாகவும், உள்ளே மிருதுவாகவும் இருக்கும்.

## ஆடாதொடை பயன்கள்



ஆடாதோடை பயன்கள்

“இது ஆடாதோடை இலையும், மிளகுப்பொடியும் கண்ணு! ஈட்டி வடிவ இலை, வெள்ளை பூக்கள் உடைய சின்ன செடிதான் இது. ஆனா, ‘ஆடாதோடைக் கொண்டால், ஆடாத உடலும் ஆடும், பாடாத குரலும் பாடும்’ னு ரொம்ப உயர்வா சொல்றாங்க.”

கபம் சம்பந்தப்பட்ட நோய்கள்:


“மேல் சளி, மூக்கடைப்பு, தொண்டை வலி, நெஞ்சில் கபம், அலர்ஜி, ஆஸ்துமா என எல்லா விதமான கபம் சம்பந்தப்பட்ட நோய்க்கும் நல்ல முதலுதவியா இருக்குது,” என்றவர் சுடச்சுட டம்ளரில் பரிமாறிய ஆடாதோடை-மிளகு கசாயத்தை மட, மட வென மூக்கைப் பிடித்துக் குடித்து முடித்தேன்.

தொண்டையில் இறங்கிய அந்த காரமும், சூடும் உள்ளிருந்த நீரை முன்பை விட வேகமாய் வெளியேற்றிக்கொண்டே இருக்க... “குட் பாட்டி... இட்ஸ் வொர்க்க்க்க்கிங்க்! ம்.. எப்டி தயாரிக்கிறது?” என்றேன்.

ஜலதோஷம்:

“ஆடாதோடை இலை 8-10 இருந்தா நல்லது, இல்லையா, ஆடாதோடை கசாயப் பவுடர் கடைகள்ல கிடைக்கும், அதுல ரெண்டு ஸ்பூன். அதை ரெண்டு டம்ளர் தண்ணில போட்டு கொதிக்க வெச்சு, அரை டம்ளரா சுண்ட வெச்சுக்கணும். வடிக்கட்டின கசாயத்த, சாப்பாட்டுக்கு முன்னாடி மூணு வேளை, இன்னிக்கும், நாளைக்கும் குடிச்சா, நாளான்னைக்கு ஜலதோஷம் இருந்த இடம் காணாம போயிடுந்தம்பி!” என்றவர்...

## விஜய் சங்கீதா விவாகரத்து வழக்கில் புதிய திருப்பம்.? நீதிபதி அதிரடி உத்தரவு



செங்கல்பட்டு குடும்பநல நீதிமன்றத்தில் நடிகரும் தமிழக வெற்றிக் கழகத் தலைவருமான விஜய் சங்கீதா விவாகரத்து வழக்கு தொடர்பான மனு இன்று விசாரணைக்கு வந்த நிலையில், வழக்கை நீதிபதி ஒத்தி வைத்துள்ளார்.

இந்த வழக்கில் இருதரப்பும் சமரசமாக முடிவுக்கு வர முயன்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நேற்று இரவு நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் நட்சத்திர ஹோட்டலில் இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக கூறப்படுகிறது.

அந்த பேச்சுவார்த்தையில், சங்கீதா தரப்பில் தமக்கும் குழந்தைகளுக்கும் சேர்த்து 250 கோடி ரூபாய் ஜீவனாம்சம் கோரப்பட்டதாகவும், விஜய் தரப்பில் 30 கோடி ரூபாய் அளிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.. மேலும், குழந்தைகளின் பராமரிப்பை தாமே மேற்கொள்வதாக விஜய் தரப்பில் கூறப்பட்டதாகவும், சங்கீதா தரப்பு அதனை ஏற்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இதனால் பேச்சுவார்த்தை உடன்பாடு இன்றி முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், விஜய் சங்கீதா விவாகரத்து தொடர்பில் இன்று நடைபெற்ற விசாரணையில், ஜூன் 15ஆம் தேதி வழக்கை நீதிபதி ஒத்தி வைத்துள்ளார். மேலும் அன்று நடைபெறும் அடுத்த விசாரணைக்கு விஜய் வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆஜராக அனுமதி வழங்குமாறு அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கோரிக்கை வைத்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

தேர்தல் வாக்குப்பதிவு நெருங்கியுள்ள சூழலில், இன்று விசாரணையில் என்ன நடக்குமோ என்ற பதற்றத்தில் இருந்த ரசிகர்கள், வழக்கு ஒத்திவைக்கப்பட்டதால் நிம்மதியடைந்ததாகவும் கூறப்படுகிறது.


## சினிமா



பூர்ணிமா ரவி இன்ஸ்டாவில் கிளாமர் ஆக போட்டோக்கள் வெளியிட்டு எல்லோரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார்.

அவரது லேட்டஸ்ட் ஹாட் போட்டோஷூட் இதோ.

## இல்லம் தேடி வந்த மகாலட்சுமி! அட்லீ வீட்டில் விசேஷம்.. மகிழ்ச்சியில் குடும்பம்



தமிழ் திரைப்பட உலகில் தனக்கென தனி முத்திரை பதித்த இயக்குநர்களில் ஒருவர் அட்லீ. “ராஜா ராணி”, “தெறி” போன்ற படங்கள் மூலம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த அவர், தொடர்ந்து பல ஹிட் படங்களை வழங்கி பட்டித் தொட்டி எங்கும் புகழ்பெற்றார். வணிக ரீதியாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் ரசிகர்களை கவரும் திறமை அவரை முன்னணி இயக்குநராக உயர்த்தியது.


இவரது தனிப்பட்ட வாழ்க்கையும் ரசிகர்களிடையே எப்போதும் பேசுபொருளாக இருந்து வருகிறது. கடந்த ஜனவரி மாதம், தனது மனைவி ப்ரியா கர்ப்பமாக இருப்பதாக அட்லீ அறிவித்தது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து, பிரமாண்டமாக வளைகாப்பு விழாவையும் நடத்தி, அந்த மகிழ்ச்சியை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொண்டார்.

இந்த நிலையில், அட்லீ ப்ரியா தம்பதிக்கு இரண்டாவது குழந்தையாக அழகான பெண் குழந்தை பிறந்துள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்த தம்பதிக்கு ஏற்கனவே “மீர்” என்ற ஆண் குழந்தை உள்ள நிலையில், தற்போது குடும்பம் மேலும் மகிழ்ச்சியடைந்துள்ளது.

2014ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட இந்த ஜோடி, தொழிலிலும், குடும்பத்திலும் சமநிலையை பேணி வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது இரண்டாவது குழந்தையின் வருகையால், அவர்களின் வாழ்க்கையில் புதிய சந்தோஷ அத்தியாயம் தொடங்கியுள்ளது.

# உறவுகள் மேம்பட A to Z வரிசையில் முறைகள்

மனிதன் தன் அறிவியல் ஆற்றல் மூலம் வாழ்க்கையை வசதியாக்கிக் கொண்டான். ஆனால் இனிமையாக்கிக் கொள்ள தவறிவிட்டான்.




இனிய வாழ்க்கைக்கு சுமுகமான உறவு அவசியம் அது மேம்பட வழிகாட்டுகிறது இந்த ஆங்கில எழுத்துக்களின் A TO Z வரிசையில் வார்த்தைகள்!

A - APPRECIATION
மற்றவர்களின் நிறைகளை மனதாரப் பாராட்டுங்கள்.

B - BEHAVIOUR
புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரம் இல்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

C - COMPROMISE
அற்ப விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள். மனம் திறந்து பேசி சுமூகமாக தீர்த்துக் கொள்ளுங்கள்.

D - DEPRESSION
மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லையே என்று சோர்வடையாதீர்கள்.

E - EGO
மற்றவர்களை விட உங்களை உயர்வாக நினைத்துக் கொண்டு கர்வப்படாதீர்கள்.

F - FORGIVE
கண்டிக்கக்கூடிய அதிகாரமும் நியாயமும் உங்கள் பக்கம் இருந்தாலும், எதிர்த் தரப்பினரை மன்னிக்க வழி இருக்கிறதா என்று பாருங்கள்.

G - GENUINENESS
எந்த விஷயத்தையும் நேர்மையாகக் கையாளுங்கள்.

H - HONESTY
தவறு செய்தால் உடனே மன்னிப்பு கேட்பதைக் கௌரவமாகக் கருதுங்கள்.

I - INFERIORITY COMPLEX
எவரையும் பார்த்து பிரமிக்காதீர்கள் நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்ற தாழ்வு மனப்பான்மையை விடுங்கள்.

J - JEALOUSY
பொறாமை வேண்டவே வேண்டாம் அது கொண்டவனையே கொல்லும்.

K - KINDNESS
இனிய இதமான சொற்களை மட்டுமே பயன்படுத்துங்கள்.

L - LOOSE TALK
சம்பந்தமில்லாமலும் அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேச வேண்டாம்.

M - MISUNDERSTANDING
மற்றவர்களைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்.

N - NEUTRAL
எப்போதும் எந்த விஷயத்தையும், முடிவு எடுத்துவிட்டுப் பேச வேண்டாம். பேசிவிட்டு முடிவு எடுங்கள் நடுநிலை தவறாதீர்கள்.

O - OVER EXPECTATION
அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பு வைக்காதீர்கள். தேவைக்கு அதிகமாக ஆசைப்படாதீர்கள்.

P - PATIENCE
சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என உணருங்கள்.

Q - QUIETNESS
தெரிந்ததை மாத்திரமே பேசுங்கள் அநேகப் பிரச்னைகளுக்குக் காரணம், தெரியாததைப் பேசுவதுதான் கூடுமானவரை பேசாமலே இருந்துவிடுங்கள்.

R - ROUGHNESS
பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டாதீர்கள்.

S - STUBBORNNESS
சொன்னதே சரி, செய்ததே சரி என பிடிவாதம் பிடிக்காதீர்கள்.

T - TWISTING
இங்கே கேட்டதை அங்கேயும், அங்கே கேட்டதை இங்கேயும் சொல்வதை விடுங்கள்.

U - UNDERESTIMATE
மற்றவர்களுக்கும் மரியாதை உண்டு என்பதை மறவாதீர்கள்.

V - VOLUNTARY
அடுத்தவர் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சை முதலில் தொடங்குங்கள். பிரச்னை வரும்போது எதிர்த்தரப்பில் உள்ளவரின் கருத்துக்களுக்கும் காது கொடுங்கள்.

W - WOUND
எந்தப் பேச்சும் செயலும் யார் மனதையும் காயப்படுத்தாமல் இருக்கட்டும்.

X - XEROX
நம்மை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அப்படியே மற்றவர்களை நாம் நடத்துவோம்.

Y - YIELD
முடிந்தவரை விட்டுக் கொடுங்கள் விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை; கெட்டுப் போகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை.

Z - ZERO
இவை அனைத்தையும் கடைப் பிடித்தால் பிரச்னை என்பது பூஜ்ஜியம் ஆகும்.

கடைபிடித்து பாருங்கள் அன்பும் கருணையும் இன்முகமும் இயல்பாகவே ஓங்கிவிடும்.

வாழ்க வளமுடன்

**M.ராதாகிருஷ்ணன்**
வாணியம்பாடி-635751

தினம் ஒரு தலைவர்கள்

# ஜார்ஜ் ஜோசப் வரலாறு



ஜார்ஜ் ஜோசப் ரோசாப்பூத் துரை என அழைக்கப்பட்டஜார்ஜ் ஜோசப் (GEORGE JOSEPH, சியார்ச்சு சோசப்பு 5 சூன் 1887 5 மார்ச்சு 1938) கேரளாவைச் சேர்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர்; வழக்குரைஞர் ; 1937-ஆம் ஆண்டு சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; இதழாசிரியர்; காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்களுடன் நேரடித் தொடர்பில் முன்னின்றவர். கேரளத்தில் நடைபெற்ற வைக்கம் கோவில் இருக்கும் தெருவில் நுழையும் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட கிறித்துவர். ஆங்கில அரசு குற்றப் பரம்பரை சட்டத்தை செயல்படுத்திய போது, அது தொடர்பாகப் பலரின் வழக்கைத் தானே முன்வந்து நடத்தி வெற்றி கண்டவர். கேரளாவில் பிறந்தாலும் தமிழகத்தை மையமாகக் கொண்டு தன்னை மிகச்சிறந்த தேசியவாதியாக அடையாளப்படுத்திக் கொண்டவர்.

1887ம் ஆண்டு கேரளாவின் திருவாங்கூர் பகுதியின் செங்கானூரில் சிரியன் மரபுவழிக் கிறித்தவப் பிரிவில் (ஆர்த்தடாக்சு) பிறந்தவர் பின்னர் கத்தோலிக்க கிறித்தவ சபைக்கு மாறினார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் முதுகலைப் பட்டம் பெற்று, பின்னர் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். கேரளத்திற்கு திரும்பியபோது ஆங்கிலேய அரசாங்கம் பல உயர் பதவிகளைத் தர இருந்த நிலையில் தந்தையாரின் வற்புறுத்தலையும் மீறி அந்தப் பதவிகளை ஏற்க மறுத்தார். அவரின் திருமணமும் ஆங்கில அரசில் உயர்பதவி வகித்த குடும்பத்தில் நடந்தேறியது. அப்போதும் அவர் ஆங்கிலேயர் தந்த பதவிகளை ஏற்க மறுத்தார்.

கிறித்தவராகப் பிறந்தாலும் காந்தியின் எதிர்ப்பையும் மீறி வைக்கம் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். தனது மகளுக்கு மாயா என புத்த மதப் பெயரை வைத்து அனைத்து மதத்தினரையும் மதிப்பவராக இருந்தார். பின்னர் வழக்குரைஞர் தொழிலில் ஈடுபடலாம் எனத் தமிழகத்திற்கு வந்தவருக்குச் சென்னை போதிய ஒத்துழைப்பைத் தராத நிலையில் மதுரையில் தனது வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கத் திட்டமிட்டு 1909 -இல் மதுரையில் குடியேறினார். மதுரையில் நடைபெற்ற பல வழக்குகளின் போது குறுக்கு விசாரணைகளில் சிறந்து விளங்கினார்.

1918களில் மதுரைப் பகுதிகளில் பிரமலைக் கள்ளர் சமூகத்தினரைக் குறிவைத்து ஆங்கிலேயர் குற்றப்பரம்பரைச் சட்டத்தைச் செயல்படுத்தி அம்மக்களை கொடுமைப் படுத்தி வந்தனர். வழக்கின் கொடுமைகளைச் சம்பந்தப்பட்டவர்களே சரிவர உணரமுடியாத காலத்தில் ஜார்ஜ் ஜோசப் எதிர்ப்பு தெரிவித்து பலரின் வழக்கைத் தானே முன்வந்து நடத்தி வெற்றி கண்டார். எப்போதும் தனது சட்டையில் ரோசாப்பூவை ஜார்ஜ் இடம்பெறச் செய்திருந்த நிலையில் கள்ளர் சமூக மக்கள் அவரை ரோசாப்பூதுரை என்று செல்லமாக அழைத்து வந்துள்ளனர். பின்னாளில் இவரைப் பார்த்தே ஜவஹர்லால் நேரு சட்டையில் ரோசாப்பூவைச் சேர்த்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது தொழிலாளர்களின் பிரச்சினைகளில் இவர் மிகவும் அக்கறை காட்டினார். 1918ஆம் ஆண்டில் சிதறிக்கிடந்த தொழிலார்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்காகத் தொழிற்சங்கம் ஏற்படுத்தினார். 1919ஆம் வருஷத்தில் இராமநாதபுரத்தில் நடந்த மாநாட்டுக்கு வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்து ஜார்ஜ் ஜோசப் செயல்பட்டார். தொழிலாளர்களின் மீது அதிக அக்கறை கொண்டதால் மதுரை தொழிலாளர் சங்கத்தின் மூலம் கூலி உயர்வு, வேலை நேரக் குறைப்பு ஆகிய போராட்டங்களில் ஈடுபட்டதுடன் பல வழக்கினையும் நடத்தியுள்ளார். போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள்மீது போடப்பட்ட பொய் வழக்கினை எதிர்த்து வாதாடி வெற்றிபெற்றார். அந்நாளில், மதுரை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையைக் காண அதிகளவில் தொழிலாளர்கள் கூடிய நிலையில் காவலர்கள் கூட்டத்தைக் கலைப்பதாகக் கூறி 2 தொழிலாளர்களைத் துப்பாக்கி சூட்டின் மூலம் கொன்றனர்.

விடுதலைப் போரில் பங்கு

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே மகாத்மா இந்திய சுதந்திரப் போரைத் தலைமை ஏற்று நடத்து முன்பாகவே ஜார்ஜ் ஜோசப் 1917இல் போராட்டத்தில் ஈடுபட்டவர். அந்தக் காலத்தில் அரசியல் போராட்டங்கள் வலிமையடையாமலும், தீவிரமான அரசியல் இயக்கங்கள் நேரடியாகச் சுதந்திரம் பெற போதுமான அளவில் நடவடிக்கைகள் எடுக்காத காலகட்டத்தில் இந்தியர்களின் பிரச்சினைகளை இங்கிலாந்தில் உள்ள பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக இந்திய தலைவர்களைக் கொண்ட குழுவொன்று இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அந்தக் குழுவில் இடம்பெற்ற மூன்று பேர் உறுப்பினர்கள் சேலம் பி.வி. நரசிம்மையர், மாஞ்சேரி ராமையா, மதுரை ஜார்ஜ் ஜோசப் ஆகியோராவர். இவர்கள் இங்கிலாந்துக்குப் பயணம் புறப்பட்டுக் கப்பலில் சென்றனர். ஆனால் இங்கிலாந்து அரசாங்கம் இவர்களது வரவை விரும்பவில்லையாதலால் தடைசெய்தது. ஜிப்ரால்டர் வரை இவர்கள் போன கப்பல் போய்ச்சேர்ந்தபோதும், இங்கிலாந்துக்குச் செல்ல முடியாமல் இவர்கள் இந்தியா திரும்ப நேர்ந்தது.[ ஜார்ஜ் மதுரையிலிருந்து கொண்டே கேரளத்தில் நடைபெற்ற பல போராட்டங்களுக்குத் தலைமையேற்று நடத்தினார். பல போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட நிலையில் இந்திய விடுதலைப் போராட்டக்களத்திலும் இறங்கினார். பால கங்காதர திலகர் மற்றும் அன்னி பெசன்ட் ஆகியோரின் ஹோம்ரூல் இயக்கத்தில் மாணவர்கள் சேரக் கூடாது என்று ஆங்கில அரசு சட்டம் இயற்றியபோது துணிச்சலுடன் அதை எதிர்த்துப் போராடினார். அப்போது தான் சுயநிர்ணயக் கொள்கையில் இந்தியாவின் கருத்தைத் தெரிவிக்கும் ஹோம்ரூல் இயக்கத்தின் குழுவில் இடம்பெறுமளவிற்கு விடுதலைப் போராட்டத்தின் உயர்ந்த இடத்திற்குச் சென்றார்.

இந்தக் காலகட்டத்தில்தான் மகாத்மா காந்தியடிகள் இந்திய சுதந்திரப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் அறிவித்த ஒத்துழையாமை இயக்கம் மதுரை ஜார்ஜ் ஜோசப்பை பெரிதும் கவர்ந்தது. அதில் முழுவதுமாக ஈடுபடலானார். ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடுவதற்காக, பெரும் வருவாய் ஈட்டித்தந்துகொண்டிருந்த தனது வழக்குரைஞர் தொழிலை உதறித் தள்ளினார்.
ஆங்கில பாணியிலான தனது உடை பழக்கத்தை மாற்றிக்கொண்டு தூய முரட்டுக் கதராடை அணையலானார். மகாத்மா அறிவித்த எல்லா போராட்டங்களிலும் ஜார்ஜ் ஜோசப்தான் முன்னணியில் இருந்தார். கேரளம், தமிழ்நாடு என இருமாநிலங்களின் போராட்டக் களத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய நிலையில் தான், காந்தியின் நட்பும், தோழமையும் ஜார்ஜ் ஜோசப்புக்குக் கிட்டியது. 1919 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற ரௌலட் சட்ட எதிர்ப்பு பொதுக் கூட்டத்தில் தமிழில் வ. உ. சி யும், தெலுங்கில் ஹரிலோத்தமராவும் பேச, ஆங்கிலத்தில் ஜார்ஜ் ஜோசப் பேசினார். 1920 களில் கிலாபத் இயக்கத்தில் இந்தியா முழுதும் சிறுபான்மைத் தலைவர்களை ஒருங்கிணைக்கும் மிகப்பெரிய பணியைச் செய்து, மிகப்பெரிய அளவில் கூட்டத்தைத் திரட்டினார்.

மோதிலால் நேருவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த ஜார்ஜ்ஜோசப் மோதிலாலின் மூத்தமகள் விஜயலட்சுமி - சையத் உசேன் காதல் விவகாரத்தில் தலையிட்டுச் சமாதானப்படுத்தும் அளவுக்கு மோதிலாலின் குடும்பத்தினருடன் நல்ல உறவில் இருந்தார்.

ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு அலகாபாத் நகரத்திலிருந்து "தி இண்டிபென்டன்ட்" எனும் பெயரில் ஒரு இதழ் நடத்தினார். அதற்கு ஜார்ஜ் ஜோசப் சில காலம் ஆசிரியராக இருந்தார். அப்பொழுது அந்தப் பத்திரிகையில் வெளியான கட்டுரைகளுக்காக இவரிடம் மன்னிப்புக் கேட்குமாறு கூறப்பட்டது. தான் எழுதிய கட்டுரைக்காக மன்னிப்பு கேட்க மறுத்ததால் அலகாபாத்தில் கைதுசெய்யப்பட்டு 18 மாதம் சிறை தண்டனையையும் அனுபவித்தார். இவரது சிறை தண்டனை நைனிடால் எனும் இடத்தில் கழிந்தது. சிறையில் இவருடன் இருந்த முக்கியமான தலைவர்களில் ஜவஹர்லால் நேருவும் ஒருவர்.
சிறையிலிருந்து விடுதலையான பின்பு, அப்போது மகாத்மா காந்தி நடத்தி வந்த "யங் இந்தியா" எனும் பத்திரிகைக்கு இவர் ஆசிரியரானார். அந்தப் பத்திரிகை வாயிலாக இவர் எழுதிய கட்டுரைகளின் மூலம் இவர் பல தேசபக்தர்களை உருவாக்கினார். சுதந்திரக் கிளர்ச்சி படித்த மக்கள் உள்ளங்களில் எழ இவரது எழுத்துக்கள் காரணமாயிருந்தன. உலகத் தலைவர்கள் பலருடன் இவர் கடிதத் தொடர்பு வைத்திருந்தார். அவர்களில் ராம்சே மக்டனால்டு, அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் ஆகியோரும் அடங்குவர்.

மேலும் தி சவுத் இந்தியன் மெயில், சத்தியார் கிரதி என்ற கையெழுத்து இதழ் , தேசபக்தன் போன்ற பல சுதந்திர போராட்ட கால இதழ்களில் ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் இருந்தார். சீரிய புரட்சிக் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்லவும் அவர் தவறவில்லை.

காங்கிரசும் ஜோசப்பும்

எந்த ஒரு கருத்தினையும் துணிச்சலுடன் தெரிவிப்பவராக இருந்ததனால் பல நேரங்களிலும் எதிர்க் கருத்து கொண்டு காங்கிரசிலிருந்து வெளியேறி மீண்டும் சேர்ந்துள்ளார். ஒரு முறை காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகியபோது காந்தி வருந்திக் கடிதம் எழுதியுள்ளார். ஜவஹர்லால் நேருவின் தலைமையில் காங்கிரஸ் கட்சியின் அமைப்பு நிலை மற்றும் விதிகளை உருவாக்கிட அமைக்கப்பட்ட பல குழுக்களிலும் இடம்பெற்றார். 1929ல் மதுரை நகர சபைத் தேர்தலில் ஜார்ஜ் ஜோசப் போட்டியிட்டபோது உள்ளூர் காங்கிரசுக்காரர்களே இவரைத் தோற்கடித்த வரலாறும் உண்டு.

பல்வேறு புகழுக்கும், பெருமைகளுக்கும் சொந்தக்காரரான விடுதலை வீரர் ஜார்ஜ் ஜோசப்பின், தியாகமும், வீரமும் மறைக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியினரே இவரது வளர்ச்சியையும், உண்மையையும் விரும்பவில்லை. இதனால் ஒரு கட்டத்தில் தீவிர அரசியல் பணியில் இருந்து விலகிக் கிறித்தவத்தில் தனது கவனத்தைச் செலுத்திய நிலையில் இந்திய விடுதலையைக் காணாது 1938-ஆம் ஆண்டு மார்ச் 5 ம் தேதி சிறுநீரகக் கோளாறு காரணமாக மதுரை அமெரிக்க மிஷன் மருத்துவமனையில் காலமானார். மதுரை புது நல்லமுத்துப் பிள்ளை ரோட்டில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டு இன்றும் கள்ளர் சமூக மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. கக்கன் உள்துறை அமைச்சராக இருந்தபோது ரோசாப்பூதுரைக்கு மார்பளவு சிலையை யானைக்கல் பகுதியில் அமைத்துப் பெருமைப்படுத்தியுள்ளார்.

# கொல்கத்தா காவல் துறை துணை ஆணையர், தொழிலதிபர் வீடுகளில் அமலாக்கத் துறை சோதனை!

**கொல்கத்தா, ஏப்.21:**

பண முறைகேடு தடுப்புச் சட்ட வழக்கில், கொல்கத்தா காவல் துறை துணை ஆணையர், தொழிலதிபர் வீடுகளில் அமலாக்கத் துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர்.

கொல்கத்தாவைச் சேர்ந்த பிரபல ரௌடி விஸ்வஜித் போத்தார் என்ற சோனா பப்பு மீது கொலை உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், அவர் ரௌடி கும்பல் மூலம் சட்ட விரோதமாக நிதி திரட்டிய விவகாரத்தில் பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிந்து அமலாக்கத் துறை தனியாக விசாரணை நடத்தி வருகிறது.

இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, ரௌடி விஸ்வஜித் போட்டரின் இடங்களில் கடந்த 1-ஆம் தேதி அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். பிறகு அவரிடம் இருந்து ரூ.1.47 கோடி மதிப்பிலான தங்க நகை, ரூ.67.64 லட்சம் மதிப்பிலான வெள்ளி, கைத்துப்பாக்கி ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

இதையடுத்து, கொல்கத்தா காவல் துறை துணை ஆணையர் சாந்தனு சின்ஹா விஸ்வாஸுக்கு சொந்தமான வீடு உள்ளிட்ட 2 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை திடீர் சோதனை நடத்தினர். இந்தச் சோதனையின்போது, சாந்தனு சின்ஹா வீட்டில் இல்லை.

தொழிலதிபர் கைது: இதேபோல், சன் என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான தொழிலதிபர் ஜய் காம்தாரின் வீட்டிலும் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்தச் சோதனையின் முடிவில் விசாரணைக்காக ஜய் காம்தாரை அமலாக்கத் துறை அலுவலகத்துக்கு அதிகாரிகள் அழைத்துச் சென்றனர். பிறகு அவரை சட்டவிரோத பணப்பரிவர்த்தனை சட்டத்தின்கீழ் கைது செய்தனர்.

# மிஸ் இந்தியா பட்டம் வென்ற சாத்வி



**புவனேசுவர், ஏப்.21:**

ஒடிசா மாநிலம் புவனேஸ்வர் நகரில் 75-வது மிஸ் இந்தியா-2026 போட்டி பிரமாண்டமாக நேற்று நடைபெற்றது.

இறுதி போட்டில் 30 போட்டியாளர்கள் கலந்து கொண்ட நிலையில், அவர்களை பின்னுக்கு தள்ளி கோவாவை சேர்ந்த சாத்வி சதீஷ் சைல் (நடுவில் இருப்பவர்) மிஸ் இந்தியா-2026 பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்த உள்ளார்.

இந்த போட்டியில் மராட்டிய மாநிலத்தை சேர்ந்த ராஜ்நந்தினி பவார் (வலதுபுறம் இருப்பவர்) 2-வது இடத்தையும், ஜம்மு-காஷ்மீரை சேர்ந்த ஸ்ரீ அத்வைதா (இடதுபுறம் இருப்பவர்) 3-வது இடத்தையும் பெற்றனர்.

வெற்றிக்கு பின்னர் சாத்வி சதீஷ்சைல்கூறுகையில்,"இது கனவுபோல உள்ளது. உலக மேடையில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்புகிடைத்ததுபெருமை" என்று தெரிவித்தார்.

# தேசிய நெடுஞ்சாலைகளில் கனரக வாகனங்களை நிறுத்தக் கூடாது: உச்சநீதிமன்றம் உத்தரவு

**புதுடெல்லி, ஏப்.21:**



தேசிய நெடுஞ்சாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர, பிற இடங்களில் கனரக வாகனங்கள், சரக்கு மற்றும் பயணிகள் வாகனங்களை நிறுத்தக் கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் ராஜஸ்தான் மாநிலம் ஃபலோடி மாவட்டம், தெலங்கானா மாநிலம் ரங்காரெட்டி மாவட்டத்தில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் மொத்தம் 34 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவங்களை கவனத்தில் எடுத்துக்கொண்டு, சாலை விபத்துகள் குறித்து உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டது.

இந்த வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, ஏ.எஸ்.சந்துர்கா ஆகியோர் அடங்கிய அமர்வு அண்மையில் பிறப்பித்த உத்தரவின் விவரம்:

தேசிய நெடுஞ்சாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர, பிற இடங்களில் கனரக வாகனங்கள், சரக்கு மற்றும் பயணிகள் வாகனங்களை நிறுத்தக் கூடாது. தேசிய நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் செல்லும் பாதை, சாலையோரம், வடிகால்கள், நடைபாதைகள் உள்ளிட்டவற்றில் புதிதாக தாபா, உணவகம் அல்லது வணிக கட்டுமானங்களுக்கு அனுமதி அளிக்கக் கூடாது.

நெடுஞ்சாலைப் பாதுகாப்பு மண்டலங்களுக்குள் அமைந்துள்ள எந்தவொரு இடத்துக்கும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (என்ஹெச்ஏஐ) அல்லது பொதுப் பணித்துறையின் முன் அனுமதி இல்லாமல் உரிமமோ, வர்த்தக ஒப்புதலோ, தடையில்லாச் சான்றோ வழங்கக் கூடாது. ஏற்கெனவே வழங்கப்பட்ட உரிமங்களை 30 நாள்களில் மறுஆய்வு செய்ய வேண்டும்.


தேசிய நெடுஞ்சாலைகள் செல்லும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நெடுஞ்சாலை பாதுகாப்பு பணிக்குழு அமைக்கப்பட வேண்டும். நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளை உரிய நேரத்தில் அகற்றும் பொறுப்பு மாவட்ட ஆட்சியருக்கும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கும் கூட்டாக இருக்க வேண்டும். நெடுஞ்சாலைகளில் நிலத்தின் பயன்பாட்டை மாற்றுவதற்குத் தடை விதிக்கும் அறிவிக்கையை மாநில அரசுகள் வெளியிட வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் தொடர்ந்து ரோந்து மேற்கொள்ளும் வகையில், மாநில காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறையினரை உள்ளடக்கி பிரத்யேக ரோந்து குழுக்கள் 30 நாள்களில் அமைக்கப்பட வேண்டும். பயணிகளின் பாதுகாப்பு என்பது அரசமைப்புச் சட்டத்தின் 21-ஆவது பிரிவின் கீழ், கண்ணியத்துடன் வாழும் உரிமையின் ஒருங்கிணைந்த அம்சமாகும் என்று தெரிவித்த நீதிபதிகள், அரசமைப்புச் சட்டத்தின் 142-ஆவது பிரிவு உச்சநீதிமன்றத்துக்கு அளித்துள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தனர்.

# பேரவைத் தேர்தல்கள்! 11,000 சமூக ஊடக பதிவுகள் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை!

**புதுடெல்லி, ஏப்.21:**

தமிழகம் உள்பட 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பேரவைத் தேர்தல்களையொட்டி, சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட 11,000 சட்டவிரோத பதிவுகள் மற்றும் உள்ளடக்கங்கள் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் கடந்த ஏப்.9-ஆம் தேதி பேரவைத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்தன. தமிழகத்தில் ஒரே கட்டமாக ஏப்.23-ஆம் தேதியும், மேற்கு வங்கத்தில் இரு கட்டங்களாக ஏப்.23, 29 ஆகிய தேதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.




தேர்தல் காலகட்டத்தில் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் சட்டவிரோதமான அல்லது செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) மூலம் தவறாக சித்திரிக்கப்பட்ட உள்ளடக்கங்கள், தங்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட மூன்று மணி நேரத்தில் நடவடிக்கை உறுதி செய்யப்பட வேண்டும் என்று சமூக ஊடகங்களுக்கு தேர்தல் ஆணையம் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேபோல், பிரசாரத்துக்கு ஏ.ஐ. மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தைப் பயன்படுத்தும்போது, அது ஏ.ஐ. உள்ளடக்கம் அல்லது எண்ம முறையில் மேம்படுத்தப்பட்டது அல்லது செயற்கை உள்ளடக்கம் என தெளிவாக குறிப்பிட வேண்டும் என்று அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், தேர்தல் பிரசார பிரதிநிதிகளுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. வெளிப்படைத்தன்மை மற்றும் வாக்காளர்களின் நம்பிக்கையைப் பேணும் வகையில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# திரிணமூல் காங்கிரஸை பெண்கள் தண்டிப்பர்: பிரதமர் மோடி

**கொல்கத்தா, ஏப்.21:**

'அரசமைப்புச் சட்டத்தின் 131-ஆவது திருத்த மசோதா (மகளிர் இடஒதுக்கீடு-தொகுதி மறுசீரமைப்பு) நிறைவேற்றத்தை தடுத்ததன் மூலம் பெண்களுக்கு துரோகமிழைத்துவிட்டது திரிணமூல் காங்கிரஸ். எனவே, மேற்கு வங்கத் தேர்தலில் அக்கட்சியை பெண்கள் தண்டிப்பார்கள்' என்று பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

மக்களவை-பேரவைகளில் மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டை விரைந்து அமலாக்குவதுடன், அதற்கேற்ப மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகபட்சம் 850 வரை அதிகரிக்கும் வகையிலான மேற்கண்ட மசோதா மீது கடந்த வெள்ளிக்கிழமை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை மக்கான வாக்குகள் கிடைக்கவில்லை. நாடாளுமன்றத்தில் தோல்வியடைந்த மோடி அரசின் முதல் மசோதா இதுவாகும்.

இந்த மசோதாவைத் தோற்கடித்ததன் மூலம் மகளிரின் அதிகார கனவைத் தகர்த்துவிட்டதாக எதிர்க்கட்சிகள் மீது ஆளும் தரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

அதேநேரம், மத்திய அரசின் சூழ்ச்சியை முறியடித்துவிட்டதாக எதிர்க்கட்சிகள் பதிலடி கொடுத்துள்ளன.

தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் பேரவைத் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் நிலையில், எதிர்க்கட்சிகளுக்கு எதிரான முக்கிய 'அஸ்திரமாக' இந்த விவகாரத்தை கையிலெடுத்துள்ளது பாஜக.

# தெருவோர கடையில் காரை நிறுத்தி மசாலா பொரியை ருசித்த பிரதமர் மோடி!

**கொல்கத்தா, ஏப்.21:**

மேற்கு வங்க பேரவைத் தேர்தலையொட்டி, ஜார்கிராம் உள்பட 4 இடங்களில் பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை பிரசாரம் மேற்கொண்டார்.



ஜார்கிராமில் பரபரப்பான சாலையொன்றில் பிரதமரின் வாகன அணிவகுப்பு சென்று கொண்டிருந்தபோது, திடீரென காரை நிறுத்தச் சொன்ன பிரதமர் மோடி, அந்த மாநிலத்தின் பிரபலமான சிற்றுண்டி உணவான 'ஜால்முரி' விற்கும் சிறிய கடைக்கு நடந்து சென்றார். 'ஜால்முரி' என்பது 'பேல்பூரி' போலவே அரிசிப் பொரியில் பச்சை மிளகாய் மற்றும் பிற மசாலாக்களைக் கலந்து தயாரிக்கப்படும் சிற்றுண்டியாகும். கடைக்காரரிடம் சென்ற பிரதமர் மோடி, தனக்கு சுவையான ஜால்முரி தயாரித்துத் தருமாறு கேட்டுக் கொண்டதுடன், அதன் விலை எவ்வளவு என்றும் கேட்டார். பிரதமரின் வாகன அணிவகுப்பு தனது கடை முன்னே திடீரென நின்றதுடன், அவரே இறங்கிவந்து, ஜால்முரி கேட்டதால் கடைக்காரருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. மற்ற கடைக்காரர்கள் மற்றும் அக்கம் பக்கம் இருந்தவர்களுக்கும் வியப்பில் ஆழ்ந்தனர். கடைக்காரரிடம் பணத்தை பெற்றுக் கொள்ளும்படி, பிரதமர் வற்புறுத்தி வழங்கினார். அப்போது, வழக்கமான அனைத்து மசாலாக்களையும் சேர்க்கலாமா என்று பிரதமரிடம் கடைக்காரர் கேட்டார். உடல் நலக் காரணங்களுக்காக, உப்பு பயன்படுத்துவதில்லை என்று பதிலளித்த பிரதமர், மற்ற அனைத்தையும் சேர்க்கலாம் என்றார்.

# 2027-இல் ஜி20 செயற்கைக்கோள் ஏவப்படும்: இஸ்ரோ தலைவர்!

**ஹைதராபாத், ஏப்.21:**

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் உள்ள இந்திய அரசுப் பொறியாளர்கள் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ), இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), இந்திய ஏரோனாடிகல் சொசைட்டி உள்ளிட்ட அமைப்புகளின் விஞ்ஞானிகள் மத்தியில் வி. நாராயணன் பேசியதாவது:

ஒரே ஏவுகலனில் (ராக்கெட்) எந்தவித மோதலுக்கும் உள்ளாகாமல் 100-க்கும் அதிகமான (104 செயற்கைக்கோள்கள்) செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்திய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. தற்போது, ஜி-20 நாடுகளின் பயன்பாட்டுக்காக (ஐரோப்பிய ஒன்றியம், ஆப்பிரிக்க ஒன்றியம், இந்தியா, அமெரிக்கா, ரஷியா, சீனா உள்பட 21 நாடுகளை உள்ளடக்கிய அமைப்பு) 'ஜி20' செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதற்கான பணியை இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது. இத் திட்டத்தில் இந்தியா முன்னணி பங்கை வகிக்கிறது. பருவநிலை, காற்று மாசு மற்றும் தட்பவெப்ப நிலையைக் கண்காணிப்பதற்கான இந்த செயற்கைக்கோள் வரும் 2027-இல் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

மேலும், 'ஏராளமான வர்த்தக ரீதியிலான செயற்கைக்கோள் திட்டங்களையும் இஸ்ரோ செயல்படுத்தி வருகிறது. 34 நாடுகளின் 433 செயற்கைக்கோள் உள்பட வணிக ரீதியில் விண்ணில் செயற்கைக்கோள்களை ஏவும் நடவடிக்கைகளை இஸ்ரோ மேற்கொண்டுள்ளது.

வணிக ரீதியில் மிக அதிக எடைகொண்ட செயற்கைக்கோளையும் இஸ்ரோ விண்ணில் வெற்றிகரமாக ஏவியுள்ளது.

வரும் 2040-இல் விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்புவதற்கான பணியில் இஸ்ரோ தீவிரமாகப் பணியாற்றி வருகிறது.

இத் திட்டத்தை இந்தியா வெற்றிகரமாகச் செயல்படுத்தினால், விண்கலம் ஏவுதல் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் பயன்பாட்டு திட்டங்கள், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டங்களில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியாவும் சேர்ந்துவிடும். மேலும், 'சமுத்ரயான்' என்ற ஆழ்கடல் ஆராய்ச்சித் திட்டத்துக்காக ஆழ்கடலின் உயர் அழுத்தத்தைத் தாங்கும் வகையிலான 100 மி.மீ. பருமனுடன் 2.2 மீட்டர் சுற்றளவுடன் கூடிய டைட்டேனியம் கலனை உருவாக்கும் பணியில் இஸ்ரோ ஈடுபட்டு வருகிறது' என்றார் அவர்.

# நொய்டா போராட்ட வன்முறைக்கு மூளையாகச் செயல்பட்டவர் தமிழ்நாட்டில் கைது

**புதுடெல்லி, ஏப்.21:**

உத்தர பிரதேச மாநிலம் கவுதம் புத்த நகர் தொழில் மண்டலங்களில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், நியாயமான ஊதியம், சரியான நேரத்தில் சம்பளம் மற்றும் பாதுகாப்பான பணிச்சூழல் கோரி அண்மையில் தொடர் போராட்டம் நடத்தினர். இதில் வன்முறை வெடித்தது.

இந்தப் போராட்டத்துக்கு மூளையாக செயல்பட்டதாக ஆதித்யா ஆனந்த் (எ) ரஸ்தி மீது குற்றம் சாட்டப்பட்டது. தலைமறைவான ரஸ்தியைப் பற்றி தகவல் தெரிவிப்பவர்களுக்கு 1 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது. காவல் துறையிடம் சிக்காமல் இருக்க அவர் அடிக்கடி தனது இருப்பிடத்தை மாற்றிக்கொண்டே இருந்தார். அவருக்கு எதிராக ஜாமீனில் வெளிவர முடியாத வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு, பல மாநிலங்களில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இந்நிலையில், கவுதம் புத்த நகர் காவல் ஆணையரகம் மற்றும் உத்தரப் பிரதேச சிறப்பு அதிரடிப்படை (STF) இணைந்த குழு, ஆதித்ய ஆனந்தைத் தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளி ரயில் நிலையத்தில் வைத்து கைது செய்தது. அவரிடம் நடத்திய விசாரணையின் போது, நொய்டாவில் தொழிலாளர் போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறைக்கான சதித்திட்டத்தில் தனக்கு பங்கு இருப்பதை ஆனந்த் ஒப்புக் கொண்டார். இந்தச் சதித்திட்டத்தின் பின்னணியில் உள்ள பெரிய வலையமைப்பைக் கண்டறியவும், பிற அம்சங்களை ஆராயவும் அவரை காவலில் எடுத்து விசாரிக்க உள்ளதாகக் காவல் துறை தெரிவித்துள்ளது.

# மேற்கு வங்கத்தில் 7 லட்சம் வாக்காளர்கள் புதியதாக சேர்ப்பு

**புதுடெல்லி, ஏப்.21:**

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தல் முதல் கட்ட வாக்குப் பதிவிற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், மாநில வாக்காளர் பட்டியலில் புதிதாக சுமார் 7 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள வாக்காளர்களில், சுமார் 3.22 லட்சம் பேர் முதற்கட்டத் தேர்தலிலும், 3.88 லட்சம் பேர் இரண்டாம் கட்டத் தேர்தலிலும் வாக்களிக்க உள்ளனர். எனினும், இவர்களில் முதல்முறை வாக்களிக்கும் 18 வயது இளைஞர்கள் எத்தனை பேர் மற்றும் பாலின வாரியான விவரங்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

# ஒடிசாவில் இந்தியாவின் முதல் அதிநவீன 3டி கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலை!

**புவனேசுவர், ஏப்.21:**

ஒடிஸா தலைநகர் புவனேசுவரத்தில் இந்தியாவின் முதல் அதிநவீன முப்பரிமாண (3டி) கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலையின் கட்டுமானப் பணிக்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மாநில முதல்வர் மோகன் சரண் மாஜீ ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டினர்.

இதுதொடர்பாக மோகன் சரண் மாஜீ 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'ஒடிஸாவில் தொழில்துறை வேகமாக பரிணாம வளர்ச்சி அடைந்து வருகிறது.

இந்தியாவின் முதல் அதிநவீன 3டி கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது மைல்கல் தருணமாகும். இந்தத் தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டம் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதிநவீன மின்னணு உற்பத்தியில் ஒடிஸாவை பெரும் சக்தியாக நிலைநிறுத்தும். இது வெறும் தொழில் முதலீடு மட்டுமல்ல. வருங்கால தொழில்நுட்பங்கள் எங்கு உருவாக்கப்படும் என்பதற்கான பிரகடனம் என்று தெரிவித்தார். செமிகண்டக்டர் உற்பத்தி பணியில் சிப் பேக்கேஜிங் கடைசி கட்டமாகும். இந்நிலையில் சிப் பேக்கேஜிங் ஆலை குறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ஒடிஸாவில் சிப் பேக்கேஜிங் ஆலை கட்டுமானம் மூலம், உலகின் மிக அதிநவீன சிப் பேக்கேஜிங் தொழில்நுட்பம் இந்தியாவுக்கு வரவுள்ளது. இந்த ஆலையை சுமார் ரூ.1,943 கோடி செலவில் கட்டமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இந்த ஆலை மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 2,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த ஆலையில் தயாரிக்கப்படும் சிப்கள் விண்வெளித் துறை, பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, 5ஜி தொழில்நுட்பங்கள், தரவு மையங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளுக்குப் பயன்படும்' என்று தெரிவித்தார்.

# ஓய்வூதியத் துறையில் எஃப்டிஐ வரம்பு அதிகரிப்பு?: விரைவில் மசோதா தாக்கலாக வாய்ப்பு!

**புதுடெல்லி, ஏப்.21:**

ஓய்வூதியத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு (எஃப்டிஐ) வரம்பை 100 சதவீதம் வரை மத்திய அரசு அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், இதற்கான மசோதா அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட வாய்ப்புள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது ஓய்வூதிய நிதியில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு 49 சதவீதமாக உள்ள நிலையில், அதை 100 சதவீதமாக அதிகரிக்கும் வகையில் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டம் 2013-இல் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான மசோதாவை நிகழாண்டு நாடாளுமன்ற மழைக்கால அல்லது குளிர்கால கூட்டத்தொடரில் மத்திய அரசு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. ஏற்கெனவே காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு 100 சதவீதம் வரை அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஓய்வூதியத் துறையிலும் அதேபோன்ற நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த ஆண்டு காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை 74 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக அதிகரிக்கும் மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.




# குன்றத்தூர் அருகே சிறுமியிடம் பாலியல் அத்துமீறல்: வீட்டு உரிமையாளர் போக்சோவில் கைது

**குன்றத்தூர், ஏப்.21:** குன்றத்தூர் அடுத்த தரப்பாக்கம் பகுதியில் கணவன், மனைவி தங்களது 5 வயது மகளுடன் வாடகை வீட்டில் வசித்து வந்தனர். இந்நிலையில், கணவன் வேலைக்குச் சென்றிருந்தபோது, வீட்டில் இருந்த குழந்தை காணாமல் போனதால் பதற்றமடைந்த தாய், அக்கம் பக்கத்தில் தேடிப் பார்த்தார்.

எங்கு தேடியும் குழந்தை கிடைக்காத நிலையில், வீட்டின் மொட்டை மாடிக்குச் சென்று பார்த்த போது, அங்கிருந்த கழிவறையில் இருந்து குழந்தை அழுதபடி வெளியே வந்தது. அப்போது வீட்டின் உரிமையாளர் செல்வம் (48) அங்கிருந்த சுவருக்கிடையே மறைந்தபடி நின்றிருந்தார்.

இது குறித்து குழந்தையிடம், ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது என்று தாய் விசாரித்த போது, வீட்டின் உரிமையாளர் செல்வம், சிறுமியை மொட்டை மாடி கழிவறைக்கு அழைத்துச் சென்று பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது தெரிய வந்தது.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாய், கத்தி கூச்சலிட்ட சத்தம் கேட்டு வந்த அக்கம் பக்கத்தினர், வீட்டின் உரிமையாளர் செல்வத்துக்கு தர்ம அடி கொடுத்தனர்.

பின்னர், இதுகுறித்து பல்லாவரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த போலீஸார், தாக்குதலில் இருந்து செல்வத்தை மீட்டு, சிகிச்சைக்காக தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், விசாரணையில், வீட்டின் உரிமையாளர் செல்வம், சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டதால், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, அவரை சிறையில் அடைத்தனர்.

# இளநீர் வியாபாரி கொலை வழக்கில் 7 பேருக்கு 3 ஆயுள் தண்டனை

**கரூர், ஏப்.21:** கரூர் இளநீர் வியாபாரி கொலை வழக்கில் 7 பேருக்கு 3 ஆயுள், ஒருவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்து கரூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கரூர் சின்ன ஆண்டாங்கோவில் பகுதியைச் சேர்ந்த இளநீர் வியாபாரியான கிருஷ்ணமூர்த்தி (25), கடந்த 2020 செப் .18-ம் தேதி ஒரு கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இதுகுறித்து கரூர் நகர போலீஸார் வழக்குப்பதிந்து, கோகுல கண்ணன், துரைபாண்டி உள்ளிட்ட 12 பேரை கைது செய்தனர். இதில், தலைமறைவாக இருந்த பிரேம்குமார் சில மாதங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டார்.

கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கில், நீதிபதி கே.ஹெச்.இளவழகன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

அதில், கோகுல கிருஷ்ணனுக்கு இரட்டை ஆயுள் சிறைத் தண்டனை விதித்து ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிட்டார்.

மேலும் துரைபாண்டி, மணிகண்டன், கேசவன், அரவிந்த குமார், தமிழரசன், அஜித், செந்தில் ஆகிய 7 பேருக்கு 3 பிரிவுகளின்கீழ் தலா 3 ஆயுள் சிறைத்தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிட்டார்.

மேலும், ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா ரூ.37,500 என தலா ரூ.1,12,500 அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

தலைமறைவாகி சில மாதங்களுக்கு பிறகு பிரேம்குமார் கைதானதால், அவர் மீதான வழக்கு தனியாக நடைபெற்றது. அவருக்கு நாளை தண்டனை அறிவிக்கப்பட உள்ளது.

# கோவில்பட்டியில் பறக்கும் படை சோதனை: சாக்கு மூட்டையில் ரூ.35.72 லட்சம் சிக்கியது

**தூத்துக்குடி, ஏப்.21:** தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் போலீசார் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, இன்று கோவில்பட்டி-கடலையூர் சாலையில் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் சாக்கு மூட்டையுடன் வந்த வாலிபர் ஒருவரை போலீசார் மறித்து சோதனை செய்தனர். சோதனையில் அவர் வைத்திருந்த சாக்கு மூட்டைக்குள் கட்டுக்கட்டாகப் பணம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்து உடனே தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தேர்தல் பறக்கும் படை அதிகாரி முத்துக்குமார் தலைமையிலான குழுவினர், பணத்தைக் கொண்டு வந்த கோவில்பட்டி அத்தைகொண்டான் இந்திராநகரை சேர்ந்த கந்தசாமி மகன் உத்தரகுமாரிடம் (வயது 32) விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அவரிடம் இருந்த ரூ.35 லட்சத்து 72 ஆயிரம் பணத்திற்கு உரிய ஆவணங்கள் ஏதும் இல்லை என்பது தெரியவந்தது. இதனையடுத்து அந்த பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள், கூடுதல் விசாரணைக்காக வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

தேர்தல் நேரத்தில் உரிய ஆவணங்களின்றி சாக்கு மூட்டையில் இவ்வளவு பெரிய தொகை கொண்டு சென்ற சம்பவம் கோவில்பட்டி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# விருதுநகரில் மீட்புப் பணியின்போது மீண்டும் வெடி விபத்து- 8 பேர் காயம்



**விருதுநகர், ஏப்.21:** விருதுநகர் அருகே கட்டனார்பட்டியில் முத்துமாணிக்கம் என்பவருக்கு சொந்தமான வனஜா பட்டாசு ஆலையில், இன்று மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23-ஆக உயர்ந்துள்ளது.

அரசு அனுமதியுடன் இயங்கிவரும் ஆலையில் வெடிவிபத்தின்போது 30க்கும் மேற்பட்டோர் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில், 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த 6 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

பட்டாசு தயாரிப்பின்போது ஏற்பட்ட உராய்வு காரணமாக வெடிவிபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதற்கிடையே, போலீசார், தீயணைப்பு துறையினர் வெடி விபத்து ஏற்பட்ட ஆலையில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, திடிரென மீண்டும் வெடி விபத்து ஏற்பட்டது.

இதில், போலீசார், தீயணைப்பு துறையினர் என 8 பேர் காயமடைந்தனர்.

# விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்து: சிறப்பு விசாரணை அதிகாரி நியமனம்



**விருதுநகர், ஏப்.21:** விருதுநகர் அருகே பட்டாசு ஆலையில் நேற்று மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் 25 பேர் உயிரிழந்தது தொடர்பாக விசாரணை நடத்த சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

விருதுநகர் அருகே உள்ள கட்டனார் பட்டியல் நேற்று மாலை ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் 25 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இச்சம்பவம் தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி, தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் தங்களது இரங்களை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்த தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கோவிந்த ராவ் என்பவரை சிறப்பு விசாரணை அதிகாரியாக தமிழக அரசு நியமித்துள்ளது. நேற்று நள்ளிரவு அவர் விருதுநகர் வந்தார்.

இன்று காலை விபத்து நடந்த பட்டாசு ஆலையை நேரில் சென்று பார்வையிட்ட சிறப்பு அதிகாரி, விசாரணை நடத்தினார். அதைத் தொடர்ந்து விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் சுகபுத்திரா முன்னிலையில் பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்று பேசினார். அப்போது பட்டாசு தொழிலில் விபத்துகள் ஏற்படாத வகையில் பாதுகாப்பாக நடத்தவும் தொழிலாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கவும் அறிவுறுத்தினார்.

அதைத் தொடர்ந்து இந்த பட்டாசு ஆலை வெடி விபத்தில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருபவரை விருதுநகர் அரசு மருத்துவமனையில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்தும் காயம் அடைந்த நபர்களிடம் விசாரணை மேற்கொண்டார். பின்னர் விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

தேர்தல் காலம் என்பதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டி நிவாரணம் விரைவில் வழங்கப்படும் என்பது குறித்தும் பாதிக்கப்பட்டவர்களிடம் எடுத்துக் கூறினார். இந்த நிகழ்வின்போது சிறப்பு அதிகாரியுடன் மாவட்ட ஆட்சியர் சுக புத்திரர், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே இரு மார்க்கத்திலும் நீந்தி கடந்த 4 சிறுவர்கள்



**ராமேசுவரம், ஏப்.21:** ஆட்டிசம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த தனுஷ்கோடி - தலைமன்னார் - தனுஷ்கோடி கடல் பகுதியை சென்னையை சேர்ந்த 4 சிறுவர்கள் நீந்திக் கடந்தனர்.

தமிழகத்தையும், இலங்கையையும் பாக் நீரிணை பிரிக்கிறது. ராமேசுவரம் தீவும், அதைத் தொடர்ந்துள்ள 13 மணல் தீடைகளும், பாக் நீரிணையை மன்னார் வளைகுடாவில் இருந்து பிரிக்கின்றன.

தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த அதே சமயம் பாறைகளும், ஆபத்தான ஜெல்லி மீன்களும் நிறைந்த கடற்பகுதியும் இதுவே ஆகும்.

பாக் நீரிணைப் பகுதியை தனியாகவோ, குழுவாக ரிலே மற்றும் மாரத்தான் முறையிலும் பலர் நீந்திக் கடந்துள்ளனர். இந்நிலையில், சென்னையை சேர்ந்த சிறுவர்களான ஸ்ரீ அஷ்வத் (11), லவ் (09), குஷ் (09), தன்வேஷ் (10) ஆகிய நான்கு பேரும் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டோராக இருந்தாலும் யாதவி விளையாட்டு அகாடமி மற்றும் இந்தியன் ஆட்டிசம் சென்டரில் நீச்சல் பயிற்சி பெற்று பல்வேறு நீச்சல் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். ஆட்டிசம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஏப்.18-ம் தேதி தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் பிற்பகல் 3.25 மணியளவில் 4 சிறுவர்களும் ரிலே முறையில் நீந்தத் தொடங்கி 17 கடல் மைல் தொலைவை 9 மணி 5 நிமிடங்கள் நீந்தி, இரவு 12.30 மணிக்கு தலைமன்னார் சென்றனர்.

உடனே, அங்கிருந்து தனுஷ்கோடி நோக்கி நீந்தத் தொடங்கி, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.27 மணிக்கு தனுஷ் கோடி அரிச்சல்முனையை வந்தடைந்தனர்.

அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது.

இந்தச் சாதனைக்காக சிறுவர்கள் 4 பேரும் மொத்தம் 34 கடல் மைல் தொலைவை நீந்திக் கடக்க 18 மணி 2 நிமிடங்கள் எடுத்துக் கொண்டனர். ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டோரும் கடலில் அதிக தூரமும், அதிக நேரமும் நீந்த முடியும் என்ற சாதனையைப் படைத்துள்ளனர்.

# தேர்தலையொட்டி ஆம்னி பேருந்துகளில் கட்டணம் பல மடங்கு உயர்வு

**சென்னை, ஏப்.21:** தேர்தலையொட்டி ஆம்னி பேருந்துகளில் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இதனிடையே அன்றைய தினம் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை போன்ற பெருநகரங்களில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் வாக்களிக்க தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். அவர்களின் வசதிக்காக நாளை முதல் தமிழக போக்குவரத்து துறை சார்பில் 10 ஆயிரம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில் அரசு பேருந்துகளில் முன்பதிவு செய்ய முடியாதவர்கள் அடுத்தபடியாக தனியார் ஆம்னி பேருந்துகளை தேர்வு செய்வார்கள், இந்நிலையில் பயணிகளின் சூழ்நிலையை பயன்படுத்தி சில ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் அதிக கட்டணம் வசூலிக்கின்றனர்.

சென்னையில் இருந்து மதுரை, கோவை, சேலம், திருச்சி, நெல்லை மற்றும் நாகர்கோவில் போன்ற முக்கிய நகரங்களுக்கு செல்லும் ஆம்னி பஸ் கட்டணம் வழக்கத்தைவிட 2 முதல் 3 மடங்கு வரை அதிகரித்துள்ளது. சாதாரண நாட்களில் ரூ.1,000 முதல் ரூ.1,500 வரை கட்டணம் வசூலிக்கப்படும் நிலையில் தற்போது பல மடங்கு அதிகரித்து உள்ளது. இதனால் நடுத்தர மக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர். நாளை, நாளை மறுநாள் இரண்டு நாட்களும் சென்னையில் இருந்து நெல்லைக்கு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனமில்லா பேருந்துகளில் அதிகபட்ச கட்டணம் ரூ.2,400 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ரூ.3 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தூத்துக்குடிக்கு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதன பேருந்துகளில் அதிகபட்சமாக ரூ.2,700 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ரூ.3,200 வரையும், மதுரைக்கு அதிகபட்சமாக ரூ.2,200 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ரூ.2,400 முதல் 3,500 வரையும், திருச்சிக்கு அதிகபட்சமாக ரூ.1,500 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ரூ.2,000 முதல் 2,600 வரையும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் இதுபோல அதிக கட்டணம் வசூலிப்பதைக் கூட ஒரு வியாபார யுக்தியாக கடந்து செல்ல முடிகிறது. ஆனால் தேர்தல் என்பது ஜனநாயக கடமை அதை நிறைவேற்ற செல்வோரிடம் இவ்வாறு அதிக கட்டணம் வசூலிப்பதை என்ன என்று சொல்வது என ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

# தமிழகத்தில் 25-ம் தேதி வரை மழை



**சென்னை, ஏப்.21:** வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக இன்றும் (20-ம் தேதி), நாளையும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென்தமிழக கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் 25-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

# ஏஐ மூலம் தேர்தல் பதிவுகளை உருவாக்கினால் சமூக ஊடகத்தில் அதை குறிப்பிட வேண்டும்

## தேர்தல் ஆணையம் உத்தரவு




**சென்னை, ஏப்.21:** தேர்தல் தொடர்பான பதிவுகளை ஏஐ-யில் உருவாக்கினால், அதை அந்த பதிவில் குறிப்பிடவேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. விதிகளை மீறி பதிவிட்ட 11 ஆயிரம் பதிவுகள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தகவல் தொழில்நுட்பச் சட்டம்-2000, தகவல் தொழில்நுட்ப விதிகள்-2021 மற்றும் தேர்தல் நடத்தை விதிகள் உள்ளிட்ட நடைமுறையில் உள்ள சட்ட விதிகளுக்கு இணங்க, அனைத்து பங்குதாரர்களும் சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்களை பொறுப்பான மற்றும் நெறிமுறை சார்ந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

தவறான அல்லது சட்டவிரோதமான ஏஐ-மூலம் உருவாக்கப்பட்ட, திருத்தப்பட்ட உள்ளடக்கங்கள் குறித்து சமூக ஊடக தளங்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட 3 மணி நேரத்துக்குள் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் பிரச்சாரப் பிரதிநிதிகள், பிரச்சாரத்துக்காக பயன்படுத்தப்படும் செயற்கையாக உருவாக்கப்பட்ட அல்லது ஏஐ மூலம் மாற்றப்பட்ட எந்தவொரு உள்ளடக்கமும், வெளிப்படைத்தன்மை.

வாக்காளர் நம்பிக்கையை பேணுவதற்காக 'ஏஐ மூலம் உருவாக்கப்பட்டது', 'டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்டது', 'செயற்கை உள்ளடக்கம்' என தெளிவாக அடையாளப்படுத்துவதையும், அதை உருவாக்கிய அமைப்பின் விவரத்தையும் வெளியிடுவதை உறுதி செய்ய வேண்டும்.

தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெற்று வரும் சட்டப்பேரவைத் தேர்தல்களில், நடத்தை விதிகளை மீறும் வகையிலான பதிவுகள், சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கக்கூடிய அல்லது சீர்குலைக்கும் திறன் கொண்ட சமூக ஊடகப் பதிவுகள், வாக்குப்பதிவு செயல்முறைக்கோ. தேர்தல் இயந்திரங்களுக்கோ எதிராக பரப்பப்படும் தவறான தகவல்கள் போன்ற சமூக ஊடக உள்ளடக்கங்கள், தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட மாநிலத் தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2026 மார்ச் 15-ம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து, இது போன்ற 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமூக ஊடகப் பதிவுகள், இணைய முகவரிகள் கண்டறியப்பட்டு, உள்ளடக்கங்களை நீக்கியதுடன், உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மார்ச் 15 முதல் ஏப்ரல் 19 வரை, சிவிஜில் செயலியைப் பயன்படுத்தி 3,23,099 புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 3,10,393 புகார்கள் தீர்க்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

# அட்சய திருதியை முன்னிட்டு நகைக் கடைகளில் குவிந்த மக்கள்

**சென்னை, ஏப்.21:** அட்சய திருதியை ஒட்டி, நகைக்கடைகளில் பொதுமக்கள் குவிந்தனர். பெரும்பாலோர் எடை குறைவான தங்க ஆபரணங்கள், நாணயங்களை வாங்க ஆர்வம் காட்டினர்.

அட்சய திருதியை நாளில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் வாங்குவது பொதுமக்களின் வழக்கமாக உள்ளது. இந்த ஆண்டுக்கான அட்சய திருதியை நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, தமிழகம் முழுவதும் நகைக் கடைகளில் பொதுமக்கள் குவிந்தனர்.

சென்னையில் தி. நகர், புரசைவாக்கம், பாரிமுனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கடைகளில் காலை முதலே மக்கள் ஆர்வமாக நகைகளை வாங்கினர். இது குறித்து, நகை வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: அட்சய திருதியை கொண்டாட்டத்தையொட்டி, தமிழகம் முழுவதும் 35 ஆயிரம் நகைக் கடைகள் காலை 8 மணிக்கே திறக்கப்பட்டன. தியாகராய நகரில் உள்ள நகைக் கடைகளில் வழக்கமான மக்கள் கூட்டம் காணப்பட்டது.

அதேநேரத்தில், எடை குறைந்த ஆபரணங்கள், நாணயங்களை அதிக அளவில் வாங்கினர். இருப்பினும், கடந்த ஆண்டை விட மக்கள் வருகை சற்று குறைவாக இருந்தது. இதற்கு காரணம். தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தான்.

தேர்தல் விதிமுறைகள் காரணமாக, பணத்தை எடுத்து வர முடியாது என்ற பயம் இருக்கிறது. இரண்டு நாள் அட்சய திருதியை இருப்பதால், திங்கள்கிழமையும் நகைகளை வாங்க வருவார்கள் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தேர்தல் விழிப்புணர்வு; சென்னையில் மாபெரும் இருசக்கர மோட்டார் வாகன பேரணி

**சென்னை, ஏப்.21:** சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் நேர்மையான மற்றும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டு மற்றும் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள், அனைத்து பேருந்து நிறுத்தங்களிலும் தேர்தல் குறித்த விளம்பரங்கள், வினாடி வினா, பேருந்துகளின் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திரையரங்குகள், வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வுப் பாடல்கள் உள்ளிட்ட பல்வகை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ரேபிடோ நிறுவனம் இணைந்து சென்னை நேப்பியர் பாலம் அருகில் இருந்து தேர்தல் விழிப்புணர்வுப் பதாகைகளுடன் 300 இருசக்கர மோட்டார் வாகனங்கள் பங்கேற்புடன் நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியினை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆர்.சுகந்தி கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் ரேபிடோ நகர மேலாளர்கள் கிருஷ்ணராஜன், எஸ்.யஷ்வந்த்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த பேரணியானது, சென்னை நேப்பியர் பாலத்தில் தொடங்கி, விவேகானந்தர் இல்லம் வந்தடைந்தது. இந்த பேரணியில் கலந்து கொண்ட அனைவரும் மோட்டார் வாகனத்தில் விழிப்புணர்வுப் பதாகையினை வாக்காளர்களுக்கு காண்பித்து தவறாமல் வாக்களித்திடவும், மெரினா கடற்கரையில் உள்ள கடைகளின் உரிமையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் துண்டுப்பிரசுரங்களை வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குளுகுளு ஊட்டியில் சுட்டெரிக்கும் வெயில்- சுற்றுலா பயணிகள் தவிப்பு



**ஊட்டி, ஏப்.21:** மழை, பனி, குளிர் ஆகிய மூன்றின் அடையாளமாக இருந்த ஊட்டி முற்றிலும் மாறுபட்ட முகத்தை காட்டுகிறது. "சூடான காபியும், குளிர்ந்த காலையும்" என்பதற்கு பெயர் பெற்ற இந்த மலை நகரம் தற்போது கடும் வெயிலின் தாக்கத்தில் வாடுகிறது.

இந்த நிலையில் ஊட்டியின் பல்வேறு பகுதிகளில் கடந்த 40 ஆண்டுகளில் காணாத வெப்பநிலை உயர்வு பதிவாகி, உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுலா பயணிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

ஊட்டியில் நேற்று 27.4 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியது. சமவெளி பகுதிகளுடன் ஒப்பிடும்போது இது சாதாரணமாக தோன்றலாம். ஆனால், வழக்கமாக 18-20 டிகிரிக்குள் நீடிக்கும் ஊட்டியின் காலநிலைக்கு இது கடும் வெப்பமாகவே கருதப்படுகிறது.

கடந்த 1986-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ந் தேதி ஊட்டியில் 29.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது. அதன்பிறகு இதுதான் இதுவரை அதிகபட்சம். அதிலும் குறிப்பாக மதிய வெயில் 'மலை நகரத்தையும்' புழுங்க வைக்கிறது.

காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. அதிலும் 12 மணிக்கு பிறகு வெப்பம் உச்சத்தை எட்டுகிறது. இதனால் ஊட்டியின் இதமான குளிரை அனுபவிக்க வந்த சுற்றுலா பயணிகள், மரநிழல், ஓட்டல் விடுதிகளில் தஞ்சம் தேடும் நிலை ஏற்பட்டு உள்ளது.

குளிர்ச்சியான காலநிலையால் தண்ணீர் தேவை குறைவாக இருந்த ஊட்டியில், தற்போது குடிநீர் தேவை கணிசமாக உயர்ந்து உள்ளது. வனச்சூழல் குறைவு, நகரமயமாக்கல் அதிகரிப்பு, உலகளாவிய வானிலை மாற்றத்தின் தாக்கம் ஆகியவை ஊட்டியின் இயல்பான காலநிலையை மாற்றி வருவதாக வானிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

ஊட்டியில் வெப்பநிலை அதிகரித்து காணப்படுவதால் பொதுமக்கள் தேவையின்றி வெளியே செல்வதை தவிர்க்க வேண்டும், அதிகளவு தண்ணீர் குடிக்க வேண்டும். குழந்தைகள், முதியவர்கள் மீது கூடுதல் கவனம் தேவை என்று மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

மேலும், ஊட்டியில் நிலவி வரும் வெப்பநிலை தற்காலிகமா? அல்லது காலநிலை மாற்றத்தின் நீண்டகால அறிகுறியா? என்பதே இப்போது அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# 23-ம் தேதி கொடைக்கானலில் சுற்றுலாத்தலங்கள் மூடப்படும் என அறிவிப்பு




**சென்னை, ஏப்.21:** தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந்தேதி நடைபெறவுள்ளது. தேர்தல் பிரசாரம் நாளை (21-ந்தேதி) மாலையுடன் முடிவடைகிறது. தேர்தலுக்கு இன்னும் 2 நாட்களே இருப்பதால் தலைவர்கள் சூறாவளியாக சுற்றுப்பயணம் செய்து தங்கள் கட்சி மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில், சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நாளான 23-ம் தேதி அன்று கொடைக்கானல் தூண் பாறை, குணா குகை, பைன் மரக்காடுகள், மோயர் சதுக்கம், பேரிஜம் ஏரி போன்ற வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத்தலங்கள் மூடப்படும் என வனத்துறை அறிவித்துள்ளது.

# சாதி, மதமற்றவர்; இயக்குநர் பார்த்திபனுக்கு சான்றிதழ் வழங்க ஐகோர்ட் உத்தரவு




**சென்னை, ஏப்.21:** நடிகர் பார்த்திபன், சென்னை சோழிங்கநல்லூர் வட்டாட்சியரிடம் கடந்த மார்ச் 20, 2026 அன்று சாதி இல்லை, மதம் இல்லை சான்றிதழ் கோரி விண்ணப்பித்திருந்தார். இந்த நிலையில், தனது விண்ணப்பத்தின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வட்டாட்சியருக்கு உத்தரவிடக் கோரி சென்னை ஐகோர்ட்டில் ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், தான் 1958-ல் பிறந்ததாகவும், பெற்றோர் பிறப்பைப் பதிவு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். பழைய எஸ்.எஸ்.எல்.சி முறையில் 11-ம் வகுப்பு வரை படித்துவிட்டு, பள்ளிச் சான்றிதழ்களைப் பெறாமலேயே படிப்பை நிறுத்தியதால், தன்னிடம் சாதி அல்லது மதத்தைக் குறிக்கும் எந்தவொரு ஆவணமும் தற்போது கைவசம் இல்லை என்றும் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி எம். தண்டபாணி முன்னிலையில் இன்று விசாரணைக்கு வந்தது. விசாரணை முடிவில், பார்த்திபனுக்கு சாதி, மதம் அற்றவர் என சான்றிதழ் வழங்க ஐகோர்ட் உத்தரவிட்டது. ஒருவாரத்தில் சான்றிதழை வழங்க வேண்டும் என்றும் கோர்ட் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் "உஸ்தாத் பகத் சிங்" என்ற தெலுங்கு பட விளம்பரத்தின் போது, பார்த்திபன் தன்னை "நாயுடு பையன்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டது பெரும்சர்ச்சையைஏற்படுத்தியது நினைவிருக்கலாம்.

# தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் நிறைவுற்றதும் அமலுக்கு வரும் விதிமுறைகள் என்னென்ன?




**சென்னை, ஏப்.21:** தமிழகத்தில் நாளை (ஏப்.21) மாலை 6 மணியோடு பிரச்சாரம் முடிவடைந்த உடன், அமலுக்கு வரும் தேர்தல் விதிமுறைகள் அடங்கிய பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் வரும் ஏப்ரல் 23-ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில் 4 முனைப் போட்டி நிலவுவதாக கூறப்படுகிறது. தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் கடைசி நேர சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில், ஏப்.21 மாலை 6 மணியோடு பிரச்சாரம் முடிவடைந்த உடன், அமலுக்கு வரும் தேர்தல் விதிமுறைகள் அடங்கிய பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார். அதன் விவரம்:

2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்.23 ஆம் தேதி காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

ஏப். 21 ஆம் தேதி மாலை 6.00 மணி முதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரையில் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126-ன் கீழ், பின்வரும் விதிமுறைகள் செயலில் இருக்கும்.

தேர்தல் தொடர்பான யாதொருபொதுக்கூட்டத்தையோ ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது.

யாதொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எஃப்.எம். ரேடியோ, வாட்ஸ்அப், முகநூல், ட்விட்டர் போன்ற அல்லது இது போன்ற சாதனம் வாயிலாகப் பொது மக்களின் பார்வைக்கு வைக்கக் கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உட்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

பொது மக்களில் எந்தவொரு நபரையும் ஈர்க்கிற வகையில், யாதொரு இசை நிகழ்ச்சி அல்லது யாதொரு திரையரங்கச் செயல்பாடு அல்லது எவ்வித ஏதேனும் பிற கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்த அல்லது ஏற்பாடு செய்வதன் மூலம் அங்குள்ள பொதுமக்களிடம் யாதொரு தேர்தல் விவகாரத்தையும் யாதொரு நபரும் பரப்புரை செய்யக் கூடாது.

இந்த விதிமுறை மற்றும் மேற்கண்ட இரண்டு விதிமுறைகள் எவ்விதத்தில் மீறப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126 (2)-ன்படி, 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

தொகுதி வெளியேயிருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் மற்றும் அத்தொகுதியின் வாக்காளர்கள் அல்லாதோர் ஏப். 21 ஆம் தேதி அன்று மாலை 6.00 மணிக்கு மேல் அத்தொகுதியை விட்டு வெளியேற வேண்டும். கல்யாண மண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பது கண்டறியப்படும்.

வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வாகன அனுமதிகள், ஏப்.21-ஆம் தேதி மாலை 6.00 மணி முதல் செயல்திறனற்றது ஆகிவிடும். சட்டமன்றத் தேர்தலுக்கான ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குப்பதிவு நாளன்று வாகன அனுமதி பின்வருமாறு:

அவரது சொந்த பயன்பாட்டிற்கான ஒரு வாகனம், தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்கான சட்டப்பேரவைத் தொகுதிக்கு ஒரு வாகனம் மற்றும் தேர்தல் முகவர் அல்லது அவரது பணியாளர்கள் பயன்பாட்டிற்கான ஒரு வாகனம் என மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் அனுமதி தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும்.

வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கும், வாக்குச் சாவடிகளிலிருந்து அழைத்துச் செல்வதற்கும் வேட்பாளர் அல்லது அவரது முகவர் வாகனத்தை வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது வாங்குவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எந்தவொரு வேட்பாளரும் அனுமதிக்கக்கூடாது. இது 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 133ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய முறைகேடான செயலாகும்.

இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட, வேட்பாளர்கள்/அரசியல் கட்சிகளின் தேர்தல் அலுவலகம் வாக்குச் சாவடியிலிருந்து 100 மீட்டர்கள் தொலைவிற்கு வெளியே அமைக்கப்படலாம். தேவையில்லாத கூட்டத்தை அவர்கள் அனுமதிக்கக் கூடாது.

# அரசியல் கார்னர்

## பள்ளி குழந்தைகள் போல ஒரு சாக்கு சொல்லி மாட்டிக் கொண்டுள்ளார் செல்வப்பெருந்தகை - அண்ணாமலை



**சென்னை, ஏப்.21:** தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

இரண்டு நாட்களுக்கு முன்பாக தமிழகத்தில் ஒரு கூட்டத்தில் பேசிய ராகுல்காந்தியின் ஆங்கில உரையைத் தமிழில் மொழிபெயர்த்த தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வப்பெருந்தகை, ராகுல்காந்தி பேசியதற்கு சற்றும் தொடர்பில்லாமல், தன் மனதில் தோன்றியதை எல்லாம் அடித்து விட்ட உண்மை, இன்றுதான் ராகுல் காந்திக்குத் தெரிந்திருக்கிறது போலும். செல்வப்பெருந்தகையை இனிமேல் எனது கூட்டத்தின் பக்கமே விடாதீர்கள் என்று உத்தரவிட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

ராகுல் காந்தியின் இன்றைய கூட்டத்திற்கு தனக்கு அழைப்பில்லை என்ற உண்மை வெளிவந்தால், இன்னும் அசிங்கமாகிவிடும் என்ற பதட்டத்தில், செல்வப்பெருந்தகை, இன்று காலை, தனது வீட்டில் வருமானவரி சோதனை நடப்பதாகவும், தன்னை வீட்டிற்குள்ளேயே சிறைப்பிடித்து வைத்திருப்பதாகவும் ஒரு நாடகமாடினார். இதனை அடுத்து, வழக்கம்போல, சினிமா வசனங்கள் பேசி, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் பொங்கல் வைக்க, தற்போது, சோதனை நடந்ததாக செல்வப்பெருந்தகை கூறியது முழுப் பொய் என்று, வருமான வரித்துறை தெளிவுபடுத்தியிருக்கிறது. மேலும், தன்னை வீட்டுக்குள்ளே முடக்கி வைத்ததாகக் கூறிய செல்வப்பெருந்தகை, வெளியே வந்து பத்திரிகையாளர் சந்திப்பு நடத்துவதிலிருந்து, அவர் கூறியது பொய் என்பது உறுதியாகியிருக்கிறது.

பள்ளி செல்லும் குழந்தைகள் போல ஒரு சாக்கு சொல்லி மாட்டிக் கொண்டுள்ளார் செல்வப்பெருந்தகை. அவரது நகைச்சுவையை நம்பி, தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் பொங்கல் வைத்திருப்பதுதான் உச்சகட்ட நகைச்சுவை. ஒரு மாநிலத்தின் முதல்-அமைச்சர், அடிப்படையான விஷயங்களைக் கூட சரிபார்க்காமல் வடக்கு, தெற்கு என்று வசனம் பேசுவது, அவரது தேர்தல் தோல்வி பயத்தைக் காட்டுகிறது.

இந்த உதவாக்கரை கூட்டணி, தமிழக மக்களை எத்தனை ஏமாளிகள் என்று எண்ணினால், இப்படி ஒரு பொய்யை துணிந்து சொல்வார்கள்?

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "ஸ்டாலின் கருப்புச் சட்டை அணிந்து சட்ட நகலை கொளுத்தியது தேசத் துரோகம்" - அன்புமணி

**மேட்டூர், ஏப்.21:** "ஸ்டாலின் கருப்பு சட்டை போட்டுக்கொண்டு சட்ட நகலை தீயிட்டு கொளுத்தினார். கருப்புச் சட்டை போட்டு கொளுத்தினால் அது எவ்வளவு பெரிய தேசத் துரோக செயல், வேறு யாராவதாக இருந்திருந்தால் சிறையில் இருந்திருப்பார்கள்," என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டப்பேரவை தொகுதி அதிமுக வேட்பாளர் வெங்கடாஜலத்தை ஆதரித்து மேச்சேரியில் பாமக தலைவர் அன்புமணி இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிரச்சாரத்தில் அன்புமணி பேசியதாவது: இந்த தேர்தல் நமக்கு மிக முக்கியமான தேர்தல், பாட்டாளிகளுக்கு மிக முக்கியத் தேர்தல். மேட்டூர் தொகுதியில் வெற்றிபெற்றால், ஆட்சி மாற்றம் நடக்கும், முதல்வராக எடப்பாடி பழனிசாமி பொறுப்பேற்பார், இது அவசியம் நடக்க வேண்டும். கொடுங்கோல் திமுக ஆட்சியை நாம் விரட்டியடிக்க வேண்டும். அதனால் தான் இந்தக் கூட்டணியில் சேர்ந்திருக்கிறோம்.

கொள்ளையடித்த பணத்தை வாக்காளர்களுக்கு கொடுக்கிறார்கள். தமிழகத்தில் 5.75 கோடி வாக்காளர்கள் இருக்கிறார்கள். வாக்காளர் ஒருவருக்கு ரூ.2,000 என்றால் ரூ.12,000 கோடி கொடுக்கிறார்கள். ரூ 20,000 கோடி தேர்தலுக்கு செலவு செய்கிறார்கள்.

இங்கே ஒரு துரோகி உள்ளார், அவர் தான் ஜி.கே.மணி. ஸ்டாலின், அவருடைய மகன் உதயநிதி, மருமகன் சபரீசன் ஆகியோர், நமது குடும்பத்தில் குழப்பத்தை உண்டாக்கி திமுக வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஜி.கே.மணியும் அவர் பிள்ளையும், ஸ்டாலினும் அவர் மகனும் நன்றாக இருக்க வேண்டும், நாம் நன்றாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் செயல்படுகிறார்கள்.

கடந்த 5 ஆண்டுகளில் பெண்கள், பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைச் செய்து கொண்டிருக்கிற ஆட்சி திமுக. தமிழ்நாட்டின் தாய்மார்கள் ஒருவர்கூட திமுகவுக்கு ஓட்டு போடக்கூடாது. கலைஞர் திமுக வேறு, ஸ்டாலின் திமுக வேறு. ஸ்டாலினுக்கு என்ன நடக்கிறதென்று தெரியவில்லை. அவரை பொம்மையாக வைத்து கொண்டு, சுற்றிலும் இருப்பவர்கள் கொள்ளையடித்து கொண்டு இருந்தனர். மாற்றம் வந்தால்தான் மக்களை காப்பாற்ற முடியும். எடப்பாடி பழனிசாமி விவசாயி, முதல்வராக வந்தால்தான் விவசாயிகள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

சிலிண்டருக்கு மானியம் கொடுப்பதாக சொல்லி ஏமாற்றிய திமுகவினர், ரூ.20,000 கோடியை 20 நாளில் செலவழிக்கிறார்கள் என்றால் எவ்வளவு கொள்ளையடிப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எடப்பாடி பழனிசாமி வன்னியர்களுக்கு 10.5 விழுக்காடு இட ஒதுக்கீடு கொடுத்தார், அதனைக் கெடுத்த துரோகி ஸ்டாலின்.

மத்திய அரசு 3 நாட்களுக்கு முன்பு ஒரு சட்டம் கொண்டுவந்தது. பெண்கள் படிக்க, வேலைக்குப் போக, எம்எல்ஏ, எம்.பி. ஆக வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தது. ஆனால், ஸ்டாலின் அந்த சட்ட நகலை கருப்புச் சட்டை போட்டுக்கொண்டு தீயிட்டு கொளுத்தினார். கருப்புச் சட்டை போட்டு கொளுத்தினால் அது எவ்வளவு பெரிய தேசத் துரோக செயல், வேறு யாராக இருந்திருந்தால் சிறையில் இருந்திருப்பார்காள். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

பெண்கள் முன்னேறுகின்ற சட்டத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடித்து, பட்டாசு வெடித்து ஸ்டாலின் கொண்டாடுகிறார். இந்தச் சட்டம் அமலாகியிருந்தால் 39 எம்.பி 59 ஆக உயர்ந்திருக்கு. அவ்வாறாக உயர்ந்திருந்தால் 20 பெண்கள் நாடாளுமன்றத்திற்கும், 117 பெண்கள் சட்டப்பேரவைக்கும் உறுப்பினர்களாக வர முடியும். பெண்கள் எம்எல்ஏ, எம்.பி ஆகக்கூடாது, அப்படி நடக்கக்கூடாது என்று ஸ்டாலின் வன்மத்தில் இருக்கிறார்.

ஐந்து ஆண்டு சாதனையை சொல்லி ஓட்டு கேட்பதை விட்டுவிட்டு ரூ.8,000 கூப்பன் கொடுப்பதாக சொல்லி ஓட்டு கேட்கிறார் முதல்வர் ஸ்டாலின். ஸ்டாலின் குடும்பம் தவிர தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்பங்களும் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள். ஒரு குடும்பத்திடம் இருக்கிற பணத்தை வைத்து தமிழ்நாட்டின் பட்ஜெட்டை போட முடியும். இங்கு, திமுக வேட்பாளர் டெபாசிட் இழக்க வேண்டும், இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெற செய்யுங்கள்" என்று அன்புமணி கேட்டுக்கொண்டார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM